விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 01 புதன்கிழமை (15.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 178

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## அரசை விட்டு ஜே.வி.பி வெளியேறுவதால் பிரச்சினை எதுவும் ஏற்படப்போவதில்லை

### ஜனாதிபதி நம்பிக்கை



பொதுக் கட்டமைப்பினை நிறுவுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுசபை, மத்திய குழு ஆகியவற்றின் அனுமதி கிடைத்துள்ளது. இதுகுறித்து ஜே.வி.பியுடன் இனி பேச்சுவார்த்தை எதனையும் மேற்கொள்ள மாட்டேன்.

அரசாங்கத்தைவிட்டு ஜே.வி.பி 16 ஆம் திகதி வெளியேறினாலும் அதனால் ஒரு பிரச்சினையும் ஏற்படப்போதில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடந்த இக்கூட்டத்தில் சந்திரிகா குமாரதுங்க மேலும் கூறுகையில்,

இலங்கை வரலாற்றிலேயே தோன்றியிருக்கும் மிகப்பலவீனமான அரசாங்கம் இது. இதனை யாரும் மறுக்கமுடியாது. வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் இவற்றிற்கு ஜே.வி.பி பதில்கூறக் கடமைப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்த பிக்குகளுடன் ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக ஆயிரம் பௌத்த பிக்குகளுடன் ஜனாதிபதி ஆலோசனை நடத்தவுள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இச்சந்திப்பு நடைபெறவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

பொதுக்கட்டமைப்பின் உள்ளடங்கல்கள், அதனை செயற்படுத்திய பின்னர் ஏற்படப்போகும் நிலைமைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் பிக்குகளுக்கு ஜனாதிபதி விளக்கமளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# பொதுக் கட்டமைப்பை அரசு கைவிட இன்று நள்ளிரவுவரை காலக்கெடு

## தமது முடிவில் மாற்றமில்லை என்கிறது ஜே.வி.பி

(நமது நிருபர்)

**பொதுக் கட்டமைப்பு யோசனையை அரசு இன்று நள்ளிரவுக்குள் கைவிடத் தவறும் பட்சத்தில் அரசிலிருந்து வெளியேறுவதைத் தவிர வேறுவழியில்லை. இந்நிலைப்பாட்டிலிருந்து ஜே.வி.பி. ஒருபோதும் பின்வாங்காது. அத்துடன் ஜனாதிபதி சந்திரிகா ஆட்சி ஒருபோதும் இருக்கமாட்டாதெனவும் ஜே.வி.பி அறிவித்துள்ளது.**

பொதுக் கட்டமைப்பிற்கு எதிராக நேற்று ஜே.வி.பியினரால் லிப்டன் சுற்றுவட்டத்தில் நடாத்தப்பட்ட எதிர்ப்புக் கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில் எமது கோரிக்கைகளை மீறி பொதுக் கட்டமைப்பில் ஜனாதிபதி கைச்சாத்திட்டால் நாம் அரசிலிருந்து வெளியேறுவோம். அதன் பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சி ஒருபோதும் இருக்கமாட்டாது. (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உத்தேசப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கும் முயற்சியை உடனடியாகக் கைவிடுமாறுகோரி கூட்டமைப்பு அரசில் அங்கம்வகிக்கும் ஜே.வி.பி நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

பொரளைக் கம்பஸ் மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் ஆரம்பமான பேரணியானது மருதானைச்சந்தி, வின்ஸ வீதியூடாக கொழும்பு லிப்டன் சுற்றுவட்டம் வரை நடாத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் அங்கு பொதுக்கூட்டமும் இடம்பெற்றது.

ஜே.வி.பின் ஆதரவாளர் சுமார் 20ஆயிரத்திற்கு மேற்பட்டோர் இதில் கலந்துகொண்டனர். (ச-08,06)

## அரசிற்கு ஐ.தே.க ஆதரவளிக்காது

(கொழும்பு)

அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து விலக்குவதற்கு முயற்சிக்கப்போவதில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உத்தேசக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. அரசாங்கத்திலிருந்து விலகிப்போவதாக எச்சரித்துள்ளது. இது அக்கட்சியின் அரசியல் அணுகுமுறையாகும். அதனை விமர்சிக்க மூன்றாவது கட்சியான தமக்கு எவ்வித அவசியமும் இல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக் கட்டமைப்பை அமுல்படுத்த உதவி வழங்கும் நாடுகள் கோரிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின்போது வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை ஒழுங்காகப் பெற்றுக்கொடுக்க அரசும், விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ள பொதுக் கட்டமைப்பினை விரைவில் கைச்சாத்திடுமாறு இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் இணைத்தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக்கு உதவி வழங்கும் குழுக்களின் சம தலைமைத்துவத்தை வழங்கும் நாடுகளின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் வாஷிங்டனில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போதே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் உதவிவழங்கும் நாடுகள் போர்நிறுத்த உடன்படிக்கையின்படி இராணுவக் குழுக்களிடையேயான ஆயுதப் பாவனைகளை அரசாங்கம் உடனடியாகக் களையவேண்டும்.

ஏனைய தமிழ் அரசியல்குழு உறுப்பினர்களை கொலைசெய்வதை புலிகள் நிறுத்தவேண்டும். அத்துடன் படைக்கு ஆட்சேர்ப்பு, சிறுவர்களை படையில் இணைத்தல் என்பன நிறுத்தப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளன. பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடுவதானது (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் முடிவை மாற்றுமாறு பிரதமர் மகிந்த ஆலோசனை

பொதுக் கட்டமைப்பு யோசனையை விலக்கிக்கொள்ளாவிட்டால் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்ளுமென்ற ஜே.வி.பி.யின் முடிவை மாற்றுமாறும், அல்லது காலக்கெடுவை நீடிக்குமாறும் பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினமிரவு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய உறுப்பினர்களுக்கும், ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வாவுக்கும் இடையில் அலரி மாளிகையில் இப்பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஜே.வி.பி. அரசாங்கத்திலிருந்து வெளியேறினால் ஏற்படப்போகும் நிலைமை (12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் இன்றுமுதல் தொடர் உண்ணாவிரதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அரசின் அடக்குமுறையைக் கண்டித்து தென்மராட்சியில் இன்றுமுதல் தொடர்ந்து மூன்று நாட்கள் அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வணிகர்மன்றங்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்த அடையாள உண்ணாவிரதமானது, சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரையும், நாளை கைதடிச்சந்தியிலும் நடைபெறவுள்ளது.

அடையாள உண்ணாவிரதத்தில் பொது அமைப்புக்கள், அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வணிகர் மன்றங்களைக் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கம்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு மனிதாபிமான உதவி வேண்டி நிற்கும் தமிழீழ மக்களுக்கான சர்வதேச நிவாரண உதவிகளைப் பகிர்ந்துகொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுகட்டமைப்பின் உள்ளடக்க விபரங்கள் வெளியாகியுள்ளன.

## பொதுக்கட்டமைப்பின் தேவையும் நோக்கமும்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கான மனிதாபிமான தேவைகளுக்கான நிவாரணப் பகிர்வு மறுவாழ்வு மற்றும் மீள் கட்டமைபு ஆகியவற்றை மேற்கொள்ள,

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து இந்தப் பணியை நிறைவேற்ற,

ஆழப்பேரலையால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் மீளமைப்புக்கான நிதியை ஒதுக்கீடு செய்ய,

இவைகளுக்காக இந்தப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுகிறது.

## அமைப்பு

இந்தப் பொதுக்கட்டமைப்பு மூன்று அடுக்குகளைக் கொண்டது.

உயர்நிலைக்குழு,

பிரதேச வாரியான குழு (வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட அம்பாறை, மட்டககளப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை).

மாவட்டக் குழுக்கள் (6 மாவட்டங்களுக்கு ஒரு குழு).

என்ற படிநிலைகளில் பொதுக்கட்டமைப்பு இயங்கும்.

## செயற்பட உள்ள நிலப்பரப்பு

கடலோரத்திலிருந்து 2 கிலோமீற்றருக்கு உள்ளான் பகுதிகளிலேயே இப்பொதுக் கட்டமைப்பு செயல்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான யுத்தநிறுத்த ஒப்பந்த சரத்துகளை இப்பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தம் எவ்விதத்திலும் மாற்றியமைக்காது தொடர்ந்து யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும்.

## பாகுபாடற்ற நடவடிக்கை

இனம், மதம், மொழி அடிப்படையில் எந்த ஒரு நபருக்கு எதிராகவும் பாகுபாடு காட்டுவதை பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தமானது தடை செய்கிறது.

## செயற்பாட்டுக் காலம்

ஓராண்டு காலத்திற்கு மட்டுமே பொதுக்கட்டமைப்பு செயற்படும். இதில் பங்கேற்கும் அனைத்துத் தரப்பினரும் ஒப்புக்கொண்டால் செயற்பாட்டுக்காலம் நீட்டிக்கப்படும்.

## உயர்நிலைக் குழு

## செயற்பாடு

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக உதவி வழங்கும் நாடுகளால் அளிக்கப்பட்ட நிவாரணங்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பான விதிமுறை உருவாக்கும். மேலும் ஆலோசனை மற்றும் கண்காணிப்புப் பணிகளையும் இது மேற்கொள்ளும்.

## பங்கேற்பாளர்கள்

இது 3 உறுப்பினர்களைக் கொண்டது. அரசுப் பிரதிநிதி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநுதி, முஸ்லிம் பிரதிநுதி ஆகியோா இந்த உயர்நிலைக்குழுவில் இடம்பெறுவர்.

## கண்காணிப்பாளர்கள்

உதவி வழங்கும் நாடுகளின 2 பிரதிநுதிகள் உயர்நிலைக் குழுக்களின் கூட்டங்களில் பங்கேற்பர்.

எந்த ஒரு முடிவும் மூன்று பிரதிநிதிகளாலும் ஒருமனதாக நிறைவேற்றப்பட வேணடும். மூன்று பிரதிநிதிகளிடமும் ஒருமித்த கருத்து ஏற்படாத நிலையில் 14 நாள் கால அவகாசம் அளித்து உயர்நிலைக் குழுவிற்கான ஒத்துழைப்பை விலக்கிக் கொள்ளலாம்.

## பிரதேச குழுக்கள்

## செயற்பாடுகள்

திட்டங்களுக்கான முன்னுரிமை, அங்கீகரித்தல், நிர்வகித்தல் மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

இதில் மொத்தம் 10 உறுப்பினர்கள் இடம் பெறுவர்.

அரசுப் பிரதிநிதிகள் இருவர், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் ஐந்து பேர், முஸ்லிம் பிரதிநிதிகள் 3 பேர் இடம்பெறுவர். பாலின சமத்துவம் இந்தக் குழு நியமனங்களில் பேணப்படும்.

## கண்காணிப்பாளர்கள்

சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் இரு பிரதிநிதிகள் இப்பிரதேசக் குழுக்களின் கூட்டத்தில் பற்கேற்பர். இதர பார்வையாளர்களையும் அழைக்கலாம்.

இக்குழு மேற்கொள்ளும் முடிவுகளுக்கு 7 உறுப்பினர்களின் ஒப்புதல் அவசியம்.

## பிரதேச நிதி

6 மாவட்டங்களில் வழங்கப்படும் நிவாரணங்கள், மறுவாழ்வு மற்றும் மீளமைப்புப் பணிகீளுக்கான பிரதேச நிதி உருவாக்கப்படும்.

பலதரப்பினரையும் உள்ளடக்கிய நிதியம் அமைக்கப்படும். இந்த நிதியத்தின் பாதுகாப்பில் இந்த நிதி இருக்கும்.

## மாவட்டக் குழுக்கள்

## செயற்பாடுகள்

தேவைகள் என்ன என்பதை தெரிவித்தல், திட்ட ஆலோசனைகளை உருவாக்குதலும் பெறுதலும், திட்டங்களின் செயற்பாடுகளை கண்காணித்தல்.

## உறுப்பினர்கள்

இது 6 மாவட்டங்களில் மட்டுமே தற்போது இயங்கும். இக்குழுக்களில் போதிய முஸ்லிம் பிரதிநிதிகளும் இடம்பெறுவர்.

இக்குழுவிலும் பாலின சமத்துவம் பேணப்படும்.

பொதுக்கட்டமைப்பின் கீழான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் 6 மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் அரச, அரச சார்பு நிறுவனங்கள் வழமையான தமது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

இந்த அடிப்படைகளிலேயே உத்தேச பொதுக்கட்டமைப்பு வரைவு உருவாக்கப்பட்டுள்ளது. (ந)

# வருடாந்த மஹோற்சவம்

(மருதங்கேணி)

கரவெட்டி தச்சன் தோப்புப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய் கிழமை தேர்த்திருவிழாவும் 22ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ந-35)

# கலை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் உதயதாரகை கலை மன்றம் நடாத்தும் புனித அந்தோனியார் திருநாள் சிறப்பு கலை நிகழ்வு இன்று புதன் கிழமை மாலை 6.00மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் கலாபு,ஷணம் செல்லையா மெற்றாஸ்மெயில் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கலைஞர் அ.ஸ்ரீபனும், சிறப்பு விருந்தினராக அண்ணாவியார் இராஜேந்திரத்தின் புதல்வர் ரி.எம். அன்ரனிப்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-5)

# பொதுமக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு ஆகிய கிராமங்களுக்கு இலங்கை மின்சார சபையினால் மின் இணைப்புப் பணிகள் பூர்த்தியாககப்பட்ட நிலையில் இன்னமும் மின் விநியோகம் வழங்கப்படாமை குறித்து இப்பகுதி மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து இலங்கை மின்சார சபையிடம் மேற்படி கிராம மக்கள் எடுத்துக கூறியிருந்த போதிலும் கூட, வீடுகளுக்கான மின் விநியோகத்தினை வழங்கப் போதிய இணைப்பு வயர்கள் மற்றும் மின்மாணிகள் கைவசம் இல்லையெனக் கூறிவருவதாகத் தெரிய வருகிறது. (ந-16)

# அரசு 50 வீத வரி அறவீடு போத்தலுக்கு 20 ரூபா நட்டம்

**-வடமாகாண ப.தெ.அ.கூ.ச.சமாசத் தலைவர்**

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையின் தற்போதைய நிலை தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாடொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமாகாண பனை - தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் நடைபெற்றது.

இப் பத்திரிகையாளர் மாநாடு வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கி.தவராஜா தலைமையில் நடைபெற்றது.

தலைவர் கி.தவராஜா அம்மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உளள 6 ஆயிரம் சீவல் தொழிலாளர்கள் திக்கம் வடிசாலையை நம்பியே தமது தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் திக்கம் வடிசாலையில் பணிபுரியும் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதனால் சீவல் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், முன்பு இவ் திக்கம் வடிசாலை அரசியல் மயப்படுத்தப்பட்டு அரசியல்வாதிகளின் பொறுப்பில் இருந்தவேளை அரசாங்கத்தால் 50 வீதம் வரிச்சலுகை அளிக்கப்பட்டதனால் அக்காலப் பகுதியில் பெரும் இலாபம் ஈட்டக்கூடியதாக இருந்தது.

ஆனால், தற்போது இத் திக்கம் வடிசாலையை வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பேற்று நடாத்தி வருகினறது.

இந்நிலையில், அரசாங்கம் எம் மீது 50 வீத வரியைத் திணித்துளளது. இதனால் எமது திக்கம் வடிசாலையில் ஒரு போத்தல் சாராயம தயாரிப்பதற்கு 97ரூபா 15 சதம் முடிகின்ற வேளையிலும் ஒரு போத்தல் சாராயத்திறகு தாம் 162 ரூபா 24 சதம் அரசாங்கத்திற்கு வரியாக வழங்கவேண்டியுள்ளது.

இதனால் கொழும்பில் இருந்து வரும் சாராயம் 135 ரூபாவிற்கு விற்கின்ற போதும் நாம் 235 ரூபாவிற்கு எமது உற்பத்தியை விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

இவ்வாறு விற்பதாலும் எமக்கு ஒரு போதலுக்கு 20 ரூபா வீதம் நட்டம் ஏற்படுகிறது என்றார். (ந-19)

# புரிந்துணர்வு ஒப்பந்தம் நிலைப்பதற்கு தமிழ்மக்களின் பலமே காரணமாகும்

**-யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர்**

(காரைநகர்)

கடந்தகால ஒப்பந்தங்கள் குறுகிய காலத்தில் கிழித்து எறியப்பட்ட போதிலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டும் கடந்த 3 வருடங்களிற்கு மேலாக நிலைத்து நிற்பதற்குத் தமிழ் மக்களின் பலமே காரணமாகும் என விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட துணை அரசியல்த்துறைத் பொறுப்பாளர் கண்ணன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ,மாதாந்த சங்கம நிகழ்வில் கடந்த வியாழக்கிழமை எழுச்சிப் பேரவைச் செயலர் வே. சிற்சபேசன் தலைமையில் காரைநகர் ப.நோ.கூட்டுறவுச் சங்க மாநாட்டு மண்டபத்தில் காரைநகர் தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வின்போது விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப பேச்சாளர் கனகலிங்கம், காரைநகர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கானகன் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தொடர்ந்து உரையாற்றும் போது காரைநகர் மக்கள் 1990ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட யுத்தங்களால் பலமுறை இடம பெயர்ந்து பல்வேறு துன்பங்களை அனுபவிதுள்ள போதிலும் அவர்கள் தேசிய உணர்வு மிக்கவர்கள். இவ்வாறு உணர்ச்சி மக்க தமிழ் மக்களின் பலத்துடனேயே எமது தலைவர் கட்டுக்கோப்பான பலம் பொருந்திய அமைபினை வளர்த்தெடுத்தார் எனக் கூறினார்.

சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக நிலைத்து நிற்பதறகு எமது மக்களின் பலமே காரணமாகும்.

வீரம் செறிந்த போராட்ட உணர்வு எமது மக்களிடம் இருக்கும் வரை எமது மூச்சு ஓயப்போவதில்லை. எண்பதாயிரம் மக்களின் உயிரையும 16ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலிகளின் தியாகங்களையும் அர்ப்பணித்த மக்கள் போராட்டததிற்கு வலுச்சேர்ப்பது மக்களின் கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (து-246)

# மாமனிதர் பேராசிரியர் துரைராஜாவின் 11ஆம் ஆண்டு நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் பேராசிரியா துரைராஜா அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர். அத்தோடு தமிழ மக்களின் வாழ்வில் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டவர். எல்லோர்க்கும் எல்லாச் செயற்பாட்டிலும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்.

துணைவேந்தர் பதவிக்கான வசதிகளைப் புறந்தள்ளி சராசரி மனிதனாக வாழ்ந்தவர். தமிழ தேசியத்திற்காக அயராது உழைத்தவர். இதனால் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் மாமனிதர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

இவரது 11வது ஆண்டு நினைவு தின நிழ்வுகள் இன்று பி.ப. 3.30மணிக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவாகள், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ந)

# குடும்பஸ்தரைக் காணவில்லை ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(யாழ்பாணம்)

குடும்பஸ்தரை காணவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த அன்ரனிப் பிள்ளை சாந்தன் (வயது38) என்பரையே காணவில்லையென முறையிடப்பட்டுள்ளது.

கரவெட்டி மேற்கில் உள்ள தனது தயாரின் வீட்டிற்கு செல்வதாக கடந்த மாதம் 28 ஆம் திகதி காலை 6.00மணிக்கு தனது வீட்டில் இருந்து இவர் சென்றதாகவும் இதுவரை இவர் வீடு திரும்பவில்லை எனவும் இவரது சகோதரி அருளப்பு அன்புமலர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் செய்துள்ள முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனவருக்கு இரு குழந்தைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ந-19)

# அலங்கார உற்சவம்

மாதகல் ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்வசம் செவ்வாய்க்கிழமை தொடங்கி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. விழாக்காலங்களில் சைவப்புலவர் நித்தியதசீதரன் ஆசிரியரின் சமய சொற்பொழிவு தினமும் இரவு 7.00 மணிக்கு நடைபெறும். (அ-118)

# யாழில் கூட்டுறவுப் பதிப்பகமொன்று நிறுவப்பட வேண்டியது அவசியம்

## கவிஞர் சோ.பத்மநாதன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் படைப்பாளிகளின் ஆக்கங்களைப் பதிப்பிக்கவும் வெளியிடவும் சந்தைப்படுத்தவும் கூட்டுறவுப் பதிப்பகம் ஒன்று அவசியம் நிறுவப்படவேண்டும். அதன் மூலம் தான் படைப்பாளிகளின் ஆக்கங்களைச் சந்தைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், இடர்களையும் சமாளித்து படைப்பாளிகளின் அந்தஸ்தினை உயர்த்திக் கொள்ளமுடியும்.

இவ்வாறு பிரபல விமர்சகரும் கவிஞருமான சோ. பத்மநாதன் யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற கவிஞர் சூரியநிலாவின் "சூரியக் குளியல்" கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

கவிஞர் கு.ரஜீபன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருமதி பி.ஜென்சன் றொனால்ட் வரவேற்புரையையும், பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் அருட்தந்தை றூபன் மரியாம்பிள்ளை ஆசியுரையையும் வழங்கினார்.

கவிஞர் சோபதமநாதன் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது

யாழ்ப்பாணத்தில் படைப்புப் பணியில் ஈடுபடும் படைப்பாளிகளின் நிலைமைகள் மிகவும் மோசமானதாகவே இருந்துவருகின்றது. பல்வேறு கஸ்டங்களுக்கும் மத்தியில் படைப்பாளிகள் தமது ஆக்க இலக்கியங்களைப் படைத்து அச்சிட்டு, வெளியிட்டு, சந்தைப்படுத்தும் போது எதிர்நோக்கும் சிரமங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

இந்நிலையில், தமது ஆக்க இலக்கியங்களைச் சந்தைப்படுத்த முன்வருகின்ற போது நூல்வர்த்தகர்கள் 40 சதவீத கமிசன் கோரிவருகின்றனர். இது பெரிய அநியாயமாகும்.

இந்த நிலைமை இருக்கும் போது படைப்பாளிகள் எவ்விதம் தமது ஆக்க இலக்கியங்களை இலகுவாகவும் இலாபமாகவும் சந்தைப்படுத்தி தாம் முதலிட்ட நிதியைப் பெற முடியும் யாழ்ப்பாணத்திலுள்ள படைப்பாளிகளிடம் தமது வெளியீடுகள் இன்னமும் சந்தைப்படுத்த முடியாத நிலையிலேயே வைத்துள்ளனர்.

இங்கு இடம்பெறுகின்ற நூல் வெளியீடுகளில் ஆகக்குறைந்தது 80 பிரதிகளாவது விலைப்படின் அது பெரிய சாதனையாகவே கருதப்படுகின்றது. இன்றைய வெளியீட்டு நிகழ்வில் உட்படுத்தப்பட்டுள்ள கவிதைத் தொகுதியை ஆககிய இளம் கவிஞர் சூரிய நிலாவின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

இந்த இளம் கவிஞருக்கு தமிழ சமுதாயத்தில் நல்லதோர் எதிர் காலம் உள்ளது. எதிர்காலத்தில் கவித்துறையில் இவர் ஒளி வீசுவார் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

சூரியக் குளியல் கவிதைத் தொகுதியின் வெளியீட்டுரையை கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி நிகழ்த்தி, தொகுதியை வெளியிட்டு வைக்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைத தலைவா வைத்திய கலாநிதி வி.தியாகராஜா அதனைத் பெற்றுக்கொண்டார்.

வெளியீட்டு விழாவில் ஏற்புரையை கவிஞர் சூரியநிலா நிகழ்த தினார். செல்வன் எமில் நன்றி யுரை தெரிவித்தார். (ற-16)

# இவ்வாண்டு டிசம்பரிலேயே பல்கலைக்கழகத்திற்கு அனுமதி

(கொழும்பு)

தற்போது நடைபெற்றுவரும் கல்விப பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்திபெறும் தகுதியான மாணவர்கள் எதிர்வரும் டிசெமபர் மாதம் அளவில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கான தீர்மானத்தை பல்கலைககழக மானியங்கள் ஆணைக குழு எடுத்திருப்பதாக ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.

தகுதியான மாணவர்கள் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி பல்கலைக கழகத்தில் சேர்த்துக் கொள்ளப் படுவர் எனத் தெரிவித்த அவர், இதற்கான வேலைகள், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகத்தில் தற்போது, நெருக்கடி நிலவி வருகின்ற போதும் குறித்த காலத்தில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் இது குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதாகவும் பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

## இராசிபலன்

**15.06.2005**
**(ஆனி 01, புதன்கிழமை)**
**அட்டமி பிற்பகல் 4.18 மணிவரை**
**இராகுகாலம் 11.53- 1.23 மணிவரை**
**சுபநேரம் 04.23 - 05.53 மணிவரை**
**அட்டமி -நவமி**

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பண வருவாய், விருந்துபசாரம், தேகநலன். |
| இடபம் | தொழில் சிந்தை, ரோக நிலை, எடுத்த காரியம் தாமதமாகும், உறவினர் மனஸ் தாபம். |
| மிதுனம் | மாதா சுகம், புதிய திருப்பம், காரிய தாமதம், சுப செலவு. |
| கடகம் | கீர்த்தி, உறவினர் வருகை, போசன நன்மை, தொழில் விருத்தி. |
| சிங்கம் | கோபப்படுதல், காரிய இடையூறு, பண விரயம், மனக்கவலை. |
| கன்னி | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், காரிய அனுகூலம். |
| துலாம் | இடமாற்றம், சயன சுகக்குறைவு, காரிய தாமதம், சுப செலவு. |
| விருச்சிகம் | உறவினர் வருகை, எடுத்த கருமங்கள் கைகூடும், கீர்த்தி, தெய்வ சிந்தை. |
| தனுசு | தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், அதிகாரம், பிறர் உதவி. |
| மகரம் | கட்டுப்பாடு, மனஸ்தாபம், முயற்சி தாமதம், ரோக பயம். |
| கும்பம் | அமைதிக் குறைவு, தொழில் தடங்கல், பிரயாணம், மனச்சஞ் சலம். |
| மீனம் | களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், தனவருவாய், செல்வாக்கு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

# பொகவந்தலாவ நகர அபிவிருத்தி தொழிற்சங்கத்தின் எதிர்ப்பால் தடை

கடந்த பெப்ரவரி மாதம் பொகவந்தலாவ நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் முற்றாக எரிந்து சாம்பலான கடைகளை மீள நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி அமைச்சினால் பொகவந்தலாவ நகரை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சர் சி.பி. ரத்னாயக்க நடவடிக்கை எடுத்தபோதிலும் மலையகத்தின் முக்கிய தொழிற்சங்கம் ஒன்று இதற்கு மறைமுகமாக எதிர்ப்புத் தெரிவித்ததனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தீவிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலமாக உதவிகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் இதுவரை அது கைகூடவில்லை. இதனால் தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தமது சுயமுயற்சியினால் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட

# பரு.பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள வல்வெட்டித்துறை, வியாபாரிமூலை, முனை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட 259கடற்றொழிலாளர்களுக்கு சிறுவர் பாதுகாப்புக்கான இலங்கை நிறுவனத்தின் நிதி உதவியுடன் கட்டு மரங்களும், வலை வகைகளும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளன.

சிறுவர் பாதுகாப்புக்கான இலங்கை நிறுவனத்தின் யாழ். மாவட்டத்திலுள்ள பங்காளித்துவ நிறுவனங்களான அறவழிப் போராட்டக்குழு, சர்வோதயம், வெண்புறா நிறுவனம் ஆகிய நிறுவனங்களூடாக இத்திட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இம் மூன்று கிராம சேவையாளர்கள் பிரிவுகளிலும் உள்ள விதவைகள், கூலித் தொழிலாளர்கள், மேசன்மார்கள், வெண்மைத் தொழிலாளர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள் உட்பட சுமார் 700 குடும்பங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, இம் மூன்று நிறுவனங்களும் சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட 175 குடும்பங்களுக்கு மேற்படி மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளிலும் அவை நிரந்தர வீடுகளையும் கடந்த சித்திரை மாதத்தில் சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவனத்தின் நிதியுதவியுடன் நிர்மாணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ற-16)


## சிறுவிளம்பரம்

**மலயாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 -**
(9567) **இரவு 8.30 வரை**


## வீதி புனரமைப்பு

(இணுவில்)

நீண்ட காலமாக செப்பனிடப் படாமல் இருந்த வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்குட்பட்ட கோணாவில் வீதி தற்போது பிரதேசசபையினால் புனரமைக்கப்பட்டுள்ளது. (122,5)

# பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஸ்ரீ.சு.கட்சி கூடி விரிவாக ஆராய்வு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள், அமைச்சர்கள், மாகாண முதலமைச்சர்கள் ஆகியோருக்கிடையில் முக்கியமான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் ஜனாதிபதி இவர்களிடம் முக்கியமான வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளார். எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பதாகப் பொதுக்கட்டமைப்புக் குறித்த இறுதி முடிவுக்குத் தான் வரவேண்டும் என்றும்,அதுகுறித்த முழுமையான அறிககையொன்றினை வெளியிட வேண்டுமென்றும் இதற்கான ஆதரவினை சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் மங்கள சமரவீர தான் 'இந்தப் பொதுக்கட்டமைப்புக்கு எதிரானவர் அல்ல என்றும் கூட்டமைப்பு அரசாங்கம் உடைந்து செல்லும் நிலையினைத் தான் விரும்பவில்லை என்றும் அரசிற்குள்ளேயே அனைத்து விடையங்களும் இடம்பெறவேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சரும, முதல் மாகாண ஆளுநர் சிங்ஸ்லி விக்கிரமரட்ண பொதுக் கட்டமைப்பு விடையத்தை ஏன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கக்கூடாது எனக்கேள்வி எழுப்பினார்.

இதேவேளை இக்கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மெளனம் சாதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

# அம்பாறை மாவட்ட புனரமைப்புக்கென கூட்டு அபிவிருத்தித் திட்டம் உருவாக்கம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தைப் புனரமைப்பதற்கென கூட்டு அபிவிருத்தித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது அந்தப் பிராந்தியத்திலுள்ள மூல வளங்கள் உச்சக்கட்ட உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

அமபாறைப்பட்டினமும் அங்குள்ள வீடுகளும் இயற்கை அனர்த்தத்திற்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய வகையில் அமைக்கப்படவுள்ளன.

அதேவேளையில், மீன்பிடிக் கிராமங்களும் சுற்றுலா முக்கியதத்துவம் வாய்ந்த இடங்களும் திட்டமிடப்பட்ட வகையில் அபிவிருத்தி செய்யப்படும்.

இதற்கான நிதியுதவியை கனேடிய உதவி வழங்கும் நிறுவனம் ஒன்று வழங்கவுள்ளது.இதற்கான ஒப்பந்தம் கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சில் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் 20 வருட காலமாக தூர்ந்து போய் கவனிப்பாரற்ற நிலையிலுள்ள 60 சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. 60 குளங்களில் 10 குளங்களை கமநல சேவைத்திணைக்களம் புனரமைக்கும். 24 குளங்களை மத்திய நீர்ப்பாசனத் திணைக்களமும் 26 குளங்களை மாகாண நீர்ப்பாசத் திணைக்களமும் புனரமைக்கவுள்ளன.

புனரமைப்பு வேலைகள் எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாத காலத்தினுள் பூர்த்திசெய்யப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ற-5)


**மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்**

- **மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி**
- **சித்திரப் போட்டி**
- **புகைப்படப் போட்டி**
- **சிறுகதைப் போட்டி**

**பெறுமதி மக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள்**

**விபரம் மிகவிரைவில் உங்கள் வலம்புரியில்.**

## இன்று ஒரு தகவல்

### புத்திக் கூர்மை

"கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு" என்று ஒரு பெரியவர் புத்திசொன்னார். அதைக் கேட்ட ஒரு சிறுபையன் "அது எப்படி பெரியவரே புத்தியைத் தீட்டுவது? கத்தியைத் தீட்டு என்றால் ஒரு கருங்கல்லில் கத்தியைத் தேய்க்கலாம்! புத்தியைத் தீட்டு என்றால் தலையைக் கொண்டு போய் தரையில் தேய்த்துக் கொண்டிருக்க முடியுமா?" என்றான். பெரியவர் உடனே புரிந்து கொண்டார். "இந்த சிறுவனுக்கு புத்திக் கூர்மை குறைவு என்று!

அதுசரி! அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வித்தியாசம்? இது ஒரு முக்கியமான கேள்வி. இந்தக் கேள்வியை சோக்ரட்டீஸிடம் அவருடைய சிஷ்யன் ஒருவன் கேட்டான். "அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வேறுபாடு?" என்று சோக்ரட்டீஸ் நிமிர்ந்து பார்த்துவிட்டு சொன்னார். "இதற்கு நான் பதில் சொல்கிறேன்.. அதற்கு முன்பு நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்றார். "என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்" என்றான்.

"அதோ பார்! அங்கே ஒரு வயதான பெரியவர் இருக்கிறாரே! நேராக அவரிடம் போ! இங்கேயிருந்து பக்கத்திலிருக்கும் கிராமத்துக்குப் போய்ச்சேர எவ்வளவு நேரம் ஆகும்?" என்று கேட்டான்.

பெரியவர் நிமிர்ந்து பார்த்தார். ஆனால் பதில் எதுவும் கூறவில்லை. இந்த சீடன் மீண்டும் அந்தக் கேள்வியைக் கேட்டான். அப்போதும் அவர் பதில் கூறவில்லை. "சரி! பெரியவர் ஒரு மாதிரியாகத் தெரிகிறார்! புத்திசுவாதீனமற்றவர் போலிருக்கிறது" என்று நினைத்துக் கொண்டு வந்த வழியிலேயே திரும்பி நடந்தான்.

கொஞ்சத் தூரம் வந்தவுடன் அந்தப் பெரியவர் இவனைக் கூப்பிட்டார். "நீ இங்கேயிருந்து பக்கத்துக் கிராமத்துக்குப் போய்ச்சேர 5 நிமிடம் ஆகும்" என்றார். இப்போது சிஷ்யன் அவரை ஒருமாதிரியாகப் பார்த்தான். அதன்பின் யோசித்தான். பின்பு அவரிடமே கேட்டான். "ஐயா! இந்தப்பதிலை திரும்பிப்போக விட்டு அதன்பின் கூப்பிட்டு இப்படிச் சொல்கிறீர்களே..! என்றான். பெரியவர் சிரித்துவிட்டுச் சொன்னார்.

"ஏனப்பா! நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய்? என்பதைப் பார்க்காமல் எப்படி நீ கிராமத்திற்குப் போய்ச்சேர ஆகக் கூடிய நேரத்தைச் சொல்லமுடியும்? அதனால் தான் உன்னை நடக்கவிட்டு விட்டு வேகத்தைப் பார்த்து அதன்பின் நேரத்தைச் சொன்னேன்" என்றார். சீடனால் பதில் எதுவும் கூறமுடியவில்லை. திரும்பி சோக்கிரட்டீஸிடம் வந்தான். நடந்ததைச் சொன்னான். "அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம்" என்றார் சோக்ரட்டீஸ்.

இந்தப் புத்திசாலித்தனம் எல்லோருக்கும் வரவேண்டும் என்பதற்காகத்தான் கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும் அதையெல்லாம் யார் கேட்கிறார்கள்?

இந்தக் காலத்து ஆசாமி ஒருவர் இன்னொருவரைப் பார்த்துக் கேட்டார். "ஏன் ஐயா! ஒரு விமானம் இங்கிருந்து கிளம்பி இரண்டு மணி நேரத்தில் மதுரைக்குப் போய்ச் சேர்கிறது. அப்படியென்றால் எனது வயது என்ன?" என்றார். இது என்ன கேள்வி? இருந்தாலும் இதைக் கேட்டவுடன் அவர் பதில் சொல்கிறார். "அப்படியென்றால் உங்களின் வயது 20" என்றார். "எப்படி அவ்வளவு சரியாகச் சொல்கிறீர்கள்?" என்றார் இவர். "வேறு ஒன்றுமில்லை.. எங்கள் பக்கத்து வீட்டில் ஒரு முழுப் பைத்தியம் இருக்கிறது. அதன் வயது 40" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### விண்வெளியில் வியத்தகு சமர்

(வாஷிங்டன்)

எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதி விண்வெளி மண்டலத்தில் வால் நட்சத்திரத்தை துப்பாக்கிக் குண்டு ஊடுருவி துளையிடுகிறது. வான் மண்டலத்தில் நட்சத்திரங்கள், கோளங்கள் உருவான காலகட்டத்தில் உருவானவை தான் வால் நட்சத்திரங்கள். இவற்றில் 'டெம்பிள் 1' என்பதுவும் ஒன்று.

அடுத்த மாதம் 4 ஆந் திகதி வானில் ஒரு புதுமை நடக்க உள்ளது. பூமியில் இருந்து 268 மைல் தொலைவில் வான வெளியில் டெம்பிள் 1 வால் நட்சத்திரத்தின் மையப் பகுதியில் புகுந்து அதில் துளைத்துக் கொண்டு அடுத்த பக்கம் வெளிப்பட உள்ளது ஒரு புல்லட் குண்டு.

'டீப் இம்பேக்ட்' என்ற ராக்கெட்டில் இருந்து இந்தக் குண்டு ஏவப்படவுள்ளது. சக்திவாய்ந்த துப்பாக்கியில் இருந்து வெளியேறும் புல்லட்டைவிட 100 மடங்கு அதிக வேகத்தில் இந்தப் புல்லட் சீறிப் பாய்ந்து வால் நட்சத்திரத்தைத் துளைக்க உள்ளது.

இதற்காக பூமியில் இருந்து 6 மாதங்களுக்கு முன்பு டீப் இம்பேக்ட் ராக்கெட் விண்ணுக்கு ஏவப்பட்டது. ஜூலை 4ல் இதில் இருந்து முதல் புல்லட் புறப்படும். அது 2வது புல்லட்டைத தாக்கி அதை சீறிப்பாயச் செய்யும். அது 3வது புல்லட்டை தாக்கி முன்னுக்கு செலுத்தும். 3வது புல்லட் வால் நட்சத்திரத்தை துளைத்து ஊடுருவும். அந்த வால் நட்சத்திரம் பனி, பாறை மற்றும் தூசியால் ஆன பந்து போன்றதாகும்.

புல்லட் அதை துளைக்கும் போது வெளிப்படும் பனி மற்றும் பாறை சிதறல்கள் ஆகியவற்றை டீப் இம்பேக்ட் ராக்கெட் படம் பிடிக்கும். வால் நட்சத்திரத்தை குண்டு துளைக்கும் முதல் பரிசோதனை இது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# பொதுக்கட்டமைப்பு குறித்த அரசியல்வாதிகளின் கருத்து

(கொழும்பு)

தென்னிலங்கை அரசியலில் பரபரப்பை உருவாக்கி இருக்கும் ஆழிப்பேரலை நிவாரண பொதுக்கட்டமைப்பு தொடர்பாக தொடர்ந்தும் அரசியல் கட்சிகள் கருத்து வெளியிட்டுவருகின்றன.

இதற்கமைய அரசியல்கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் வருமாறு,

***மத்திய மற்றும் சிறுதோட்ட மற்றும் கிராமிய வள அபிவிருத்தி அமைச்சர் சீ.பீ. ஏக்கநாயக்க***

50 வருடங்களுக்கு மேலாக நாம் வாக்குறுதி அரசியலையும் பிரதிபலன் கிடைக்கும் அரசியலையுமே செய்து வந்துள்ளோம். அவற்றை முடிவிற்கு கொண்டுவருவதற்கான காலம் தற்போது வந்துள்ளது. தற்போதைய நிலையில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது.

தங்களுக்கென்று ஒரு தகுதியை ஏற்படுத்திக் கொள்ளும் அரசியலைவிடுத்து நாட்டைப் பற்றிச் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

ஆழிப்பேரலையால் சுமார் 50ஆயிரம் உயிர்களை நாம் இழந்தோம். பலகோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் அழிந்தன. எல்லோரும் ஒன்று சேருங்கள் என்றே அது நமக்கு கூறியது. அதிகாரத்திற்காக செயற்பட்டால் அப்பாவிப் பொதுமக்களே பாதிக்கப்படுவார்கள். 2020, 2025 ஆம் ஆண்டுவரை செயற்படுத்தக் கூடியவகையிலே நாம் திட்டங்களை வகுப்போம்.

சிலர் அரசாங்கம் கவிழும் எனப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்ப்பது போன்று அரசாங்கத்திற்கு எதுவும் நடக்காது. அரசாங்கம் மிக நன்றாக முன்னோக்கிச் செல்லும். அரசாங்கத்தைப் பாதுகாக்கவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறவும் நாங்கள் தயாராகி வருகின்றோம். ஆழிப்பேரலை நிவாரணப்பொதுக்கட்டமைப்பு பற்றி எதுவும் அறியாததால்தான் ஜே.வி.பிஅதனை எதிர்த்து வருகிறது. இதனைப் பற்றி பூரண விளக்கம் பெற்றதும் அவர்கள் வேறு நடவடிக்கை எடுப்பார்கள். பல கட்சிகள் ஒன்றிணைந்தே ஐ.ம.சு கூட்டமைப்பு உருவானது.

இந்தக் கட்சிகளுக்கிடையே சில கருத்து வேறுபாடுகள் உள்ளன. அவரவர் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு அந்தந்தக் கட்சிகளுக்கு ஜனநாயக ரீதியாக சுதந்திரம் உள்ளது. அதனால் அவர்கள் மற்றுமொரு தனவந்த கட்சியுடன் இணைவார்கள் என நான் நினைக்கவில்லை.

***ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச***

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் என்ற வகையில் செயற்படுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தவறிவிட்டது. தனித்து முடிவுகளை எடுத்து அவற்றை வெளியிட்டுவிட்டு அதன்பின்னர் அந்தக் கருத்தை அரசாங்கத்தின் ஏனைய கட்சிகளின் மீது பலவந்தமாகத் திணிக்க ஜனாதிபதியோ ஏனையவர்களோ முயற்சிப்பார்களாயின் அந்த விதமாக கூட்டமைப்பு அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியாது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி தனித்து தீர்மானங்களை எடுத்து பின்னர் அதனை ஏனைய கட்சிகளின் மீது திணிக்கும் நிலை இருந்திருக்கலாம். ஆனால் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அந்த பழைய பழக்கத்தை மீண்டும் கொண்டு வருவதென்பது முடியாத காரியம்.

ஜனாதிபதி இன்று பொதுக்கட்டமைப்புப் பற்றி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது பொதுஜன் ஐக்கிய முன்னணியின் நிர்வாகத்திற்கு ஏற்ற வகையிலாகும். ஜே.வி.பிஎன்பது சில கட்சிகளைப் போன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எரிபொருளில் ஓடும் கட்சியல்ல. அது சுயாதீன அரசியல் சக்தி கொண்ட தனித் தன்மை வாய்ந்த ஒரு அரசியல் கட்சியாகும். அதுபற்றிப் புரிந்து கொள்ளாது தீர்மானங்களை எடுத்தலும் அந்தத் தீர்மானங்களை தான் விரும்பும் வகையில் செயற்படுத்த முனைவதும் அரசாங்கத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இணக்கப்பாடடுடன் செயற்பட முடியாவிடில், முடிவுகளை எடுக்க முடியாவிடில் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு நிலையான எதிர்காலம் இருக்கமுடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமை இந்த நிலையை இனிமேலும் ஏற்றுக கொள்ளத் தயாரில்லாவிடில் கூட்டமைப்பு அரசாங்கததிற்கு நிலையான எதிர்காலம் இல்லை.

ஜனாதிபதி தற்போது தனது பதவிக்காலத்தின் கடைசிக்கட்டத்தில் இருக்கிறார். அதனால் அவர் ஏனைய விடயங்கள் பற்றி யோசிக்காது தனது பிரச்சினையைப் பற்றி மட்டுமே யோசித்து நடவடிக்கை எடுக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. அதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் நாங்களும் மட்டுமல்லாது முழு நாடுமே சிக்கலில் விழ இடமுள்ளது. அந்த முடிவானது விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தங்களின் இலக்கை அடைவதற்கு ஒரு உந்து சக்தியாக அமையும்.

அனைத்து விடயங்கள் பற்றியும் யோசித்து திருத்திக்கொள்ள ஜனாதிபதி முயல்வாராயின் கூட்டமைப்பு அரசாங்கம் தொடரும். அவ்வாறின்றேல் அரசாங்கம் கவிழும்.

***ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் மத்தும பண்டார***

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவிதியை கூட்டமைப்பு அரசாங்கமே முடிவு செய்துவிட்டது. தற்போதைய பிரச்சினை காலமும் நேரமும் மட்டுமே. தேர்தலுக்கு முன்னர் அவர்கள் கூறிய பொய்கள், வழங்கிய உறுதிமொழிகள் போன்றவற்றை நிறைவேற்றமுடியாமையினால் தற்போது அவை அவர்களின் பின்னால் வருகின்றன.

பொதுக்கட்டமைப்பு எனும் போர்வைக்குள் மறைந்து கொண்டு ஜே.வி.பி கூட்டமைப்பில் இருந்து செய்த தவறுகளை மறைக்க முயற்சிக்கிறது. தற்போது மக்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் தேவையை உணர்நதுள்ளனர். பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடப் போவதாக ஜனாதிபதி கூறுகிறார். அவர் அவ்வாறு செய்வார் என நாங்கள் நினைக்கிறோம்.

ஜே.வி.பிஅரசாங்கத்திலிருந்து விலகினாலும், இல்லாவிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த தேர்தலில் வெற்றிபெறும். இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் தேர்தல் நடாத்தப்பட்டாக வேண்டும்.

இந்தப் பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கம் என்ன என்பது பற்றி நாம் அறியோம். குறைந்த பட்சம் அதுபற்றி பிரதமர் கூட எதுவும் அறியமாட்டார். ஜனாதிபதி இந்தப் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டால் ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு வெளியேறுமாம். அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டிய தேவை எங்களுக்கில்லை.

***ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கே.பாயிஸ்***

இந்தப் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டால் அரசாங்கம் தற்போதிருக்கும் நிலையை விட மிக மோசமான நிலையை அடையும்.

அது ஒருவகையில் தேசிய மட்டத்திலான பிரச்சினைகள்ளத் தோற்றுவிக்கும். வடகிழக்கில் ஆழிபபேரலையால் முஸ்லிம் மக்களுக்கே பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இந்தப் பொதுக் கட்டமைப்பு சம்பந்தமாக முஸ்லிம் மக்களின் கருத்துக்களைப் பெறாது யாரோ கொடுத்த ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதே இப்போது நிகழ்கிறது.

இந்தப் பொதுக்கட்டமைப்பு வேண்டவே வேண்டாம் என நாம் கூறவில்லை. பாதிக்கப்பட்ட அந்தப பிரதேசங்களுக்கு நிவாரணம் வழங்க ஏதாவது ஒரு திட்டம் தேவை. அதனை நாம் எதிர்க்கவில்லை. அவை ஒரு ஒழுங்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். யாரோ எடுக்கும் தீர்மானங்கள் எங்கள் மீது திணிக்கப்படுவதனையே நாங்கள் கண்டிக்கிறோம்.

அரசாங்கம் இதில் கையெழுத்திட்டால் மீண்டும ஒரு தேர்தலுக்குச் செல்ல வேண்டும். அது தவிர வேறு மார்க்கம் இல்லை. ஜே.வி.பி விலகப் போவதாகச் சொன்னாலும் அப்படிச் செய்யுமா? என்ற சந்தேகம் அவர்கள் அரசாங்கத்திற்கு வந்தபின்னர் சொன்னவற்றையும் செய்தவற்றையும் பார்த்தால் சொன்னதைச் செய்யமாட்டார்கள் என்றே தோன்றுகிறது.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்**

அரசாங்கம் ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு கைச்சாத்திட்டால் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திடுவார்கள். ஜனாதிபதி இதில் கையெழுத்திட்டால் ஜே.வி.பிஅரசாங்கத்தை விட்டுச் செல்ல இடமுண்டு. அப்படி நடந்தால் அரசாங்கம் பெரும்பான்மையை இழந்துவிடும். ஆனால் என்ன நடக்கும் என இப்போது சொல்ல முடியாது.

அரசாங்கம் எம்மிடம் ஆதரவு வேண்டினால் நாம எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்திற்கு ஆதரவளிப்போம். அரசாங்கத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் குறைவாக இருப்பது பற்றி அரசாங்கமே பார்ததுக் கொள்ள வேண்டும். ஜே.வி.பி வெளியேறினால் என்ன செய்வதென்று அரசாங்கம் பார்க்க வேண்டும்.

வேறு கட்சிகளின் ஆதரவு கிடைத்தால் அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியும். அப்படி இல்லையெனில், மற்றுமொரு தேர்தலுக்குச் செல்ல வேண்டி ஏற்படும். நாங்கள் தேர்தல் ஒன்றிற்கு முகம் கொடுக்கத் தயார். ஜனாதிபதித் தேர்தலுக்கோ, பொதுத்தேர்தலுக்கோ, சர்வஜன வாக்கெடுப்பிற்கோ எதற்கென்றாலும் நாங்கள் தயார். அரசாங்கம் தற்போது கூறுவதை வைத்துப் பார்க்கும்போது இந்த நிவாரண பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடும் என நினைக்க முடியும்.

நாம் கடந்த 31ஆம் திகதி தமிழீழ விடுதலைப புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனைச் சந்தித்தோம். பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் அரசாங்கம் கைச்சாத்திட்டால் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திடும் என அவர் கூறினார். இதில் கையெழுத்திடாவிட்டால், விடுதலைப புலிகளுக்கு எவ்வித நட்டமும் இல்லை. இந்த சின்னத் திட்டத்தைக்கூட தர முடியாவிடில் தேசியப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு தரப்போகிறார்கள் என தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்திற்குக் கூறுவார்கள்.

இந்தப் பொதுக்கட்டமைப்பு நல்ல ஆரம்பம். இதன் மூலம் இருசாராருக்குமிடையில் அவநம்பிக்கை குறைந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் இடத்திற்குச் செல்லலாம்.

அதனையே நாங்களும் விரும்புகிறோம். ஐக்கிய இலஙகைக்குள் தீர்வு காண்பதையே நாம் எதிர்பார்கிறோம். தமிழர்களோ சிங்களவர்களோ யாருமே யுத்தத்தை விரும்பவில்லை. (ற)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

## தமிழக ஊடகவியலாளர்களுக்கு காவல் துறை அலுவலகத்தில் தனித்துவமான கௌரவம்

என். விஜயன்

16 காவல்துறை ஆணையாளர் அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள பிறஸ் றூமுக்குள் சென்று அமர்ந்து கொண்டேன்.

பிறஸ்றூம் சகல வசதிகளையும் கொண்டிருந்தது. குளிரூட்டப்பட்ட அறையில் விலை உயர்ந்த இருக்கைகள், தொலைக்காட்சி, தொலைபேசி, குடிநீர் என சகல வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊடகங்களின் செய்தியாளர்களும் அந்த அறையில் கூடிக்கொள்வர். ஒருவருடன் ஒருவர் அந்நியோன்னியமாகப் பேசிக்கொள்வர்.

அது மட்டுமல்ல ஒரு பத்திரிகையின் செய்தியாளர், தான் பெற்றுக் கொண்ட செய்தியை மற்றைய பத்திரிகையின் செய்தியாளருக்கும் எந்த விதமான மறைப்புக்களும் இல்லாமல் தெரியப்படுத்துவார் .

அந்த அப்பளுக்கற்ற பெருந்தன்மையை கண்னுற்ற எனக்கு யாழ்ப்பாணத்து செய்தியாளர்களின் அவஸ்தை நிலையே மனத்திரையில் காட்சி தந்தது.

யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகையின் செய்தியாளர் இன்னொரு பத்திரிகையின் செய்தியாளருடன் கதைக்கவே கூடாது என்ற கட்டுப்பாடு, அவ்வாறு கதைத்தாலும் புறாவிட்டுப் புறாபிடிப்பதுபோல தம் பக்கத்திற்கு இழுக்கும் கயமைத் தனம். ஒரு பத்திரிகையில் சேர்ந்து பயிற்சி பெற்றுவிட்டு அந்தப் பத்திரிகைக்கே துரோகம் இழைக்கும் கொடுமைத்தனம் இவை எல்லாம் ஏன்? எதற்கு? இந்த சிந்தனைகள் என்னுள் பொங்கின.

தமிழகம் எமக்கு அண்டை நாடு மட்டுமல்ல, எம் தாய் மண்ணின் தாய் நாடும் அதுவே. அப்படி இருந்தும் அங்கிருக்கின்ற உயர்ந்த பண்புகள் நம்மை மட்டும் விலகிச் சென்றது ஏன். இந்த நிறைவுகளோடு தினமணியின் செய்தியாளர் சசிதரனைத் தேடி என்கண்கள் நோட்ட மிட்டன.

பிறஸ்றூமில் இருந்த சில செய்தியாளர்கள் ரீவி பார்த்துக் கொண்டு இருந்தார்கள் இன்னும் ஒரு சிலர் அங்குள்ள தொலைபேசி ஊடாக தமது பணிமனைக்குச் செய்திகளை அனுப்பிக்கொண்டிருந்தனர்.

அந் நேரத்தில் மேலும் சில செய்தியாளர்கள் தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் செய்திகளைத் தமது குறிப்புப்புத்தகத்தில் குறித்துக் கொண்டார்கள். பார்க்கச் சிரிப்பாக இருந்தது.

ஆனால் அது பற்றி அங்கிருந்த எந்தச் செய்தியாளர்களுமே அலட்டிக்கொள்ள வில்லை. அது வழமையாக நடக்கின்ற ஒரு விடயம் என்பதை என்னால் உணர முடிந்தது.

பிறஸ்றூமுக்குள் நான் நுழைந்த போது அங்கிருந்த எந்தச் செய்தியாளர்களும் என்னை ஆச்சரியத்தோடு பார்க்கவில்லை. விடுப்பு விண்ணாணம் எதுவும் கேட்டதாகவும் இல்லை. ஒருவர் மட்டும் 'நீங்கள் எந்த மீடியா...' என்று கேட்டார். அந்தக் கேள்வி எனது தனிமையைக் கலைக்க அவர் காட்டிய உதவியாக அல்லது எனது மௌனக்கலைப்பிற்கு அவர் செய்த நயத்தக்க அணுகுமுறையாக மட்டுமே பார்க்கப்படவேண்டும்.

அதேவேளை யாழ்ப்பாணமாக இருந்தால், ஒரு புதியசெய்தியாளருடன பழையசெய்தியாளர்கள் எவ்வாறு கதைப்பார்கள் என்பதைக கற்பனை செய்தபோது எனக்குள் ஏற்பட்ட என் குருதிக்கொதிப்பை அந்த ஏஸி அறையாலும் ஆற்ற முடியாமல் போனது.

ஆம் நாமாக இருந்தால் , என்ன பெயர் என்பதில் ஆரம்பித்து நீங்கள் எல்லாம் மீடியாவுக்கு லாயக்கில்லை என்பதோடு முடித்திருப்போம். இது எமது நாகரிகம். வந்தபுதியவனும் அன்று விட்டன் கொண்டல் அடி என்பது போல, செய்தியாளர் வேலைக்கு முழுக்குப் போட்டிருப்பான்.

இந்த இரு வேறுநிலை தமிழகத்தினதும், யாழ்ப்பாணத்தினதும ஊடகத்துறையின் வளர்ச்சியில் நேரானதும் எதிரானதுமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. என்பது எனது முடிபு.


### செய்தியாளர் வந்தார்

சென்னை மாநகரின் உச்சி வெயிலின் தாக்கத்தை, குளிரூட்டப் பட்ட பிறஸ்றூம் ஆற்றுப்படுத்திக் கொண்டிருந்தது. அங்கு இயங்கிக்கொண்டிருக்கும் ரீவி ஒரு புறம். தத்தம் விருப்பு வெறுப்புக் கேற்ப சனலை மாற்றும் செய்தியாளர்கள் இன்னோர் புறம் . வத்திக்கான் ஆட்சிபோல் எதிர்ப்பு எதுவும் தெரிக்காமல் ரீவி பார்க்கும் செய்தியாளர்கள். இந்த சுகமான சூழ்நிலைக்குள் என் சிந்தனைகள் மூழ்கி இருக்க கதவு திறக்கப்படும் சத்தத்தில் என் கண்கள் அவ் வழி நோக்கின.

செய்திளார் சசிதரன் என்னை நோக்கி வந்தார். அவரின் வரவைக் கண்டதும் எனக்குள் பெரும் நிம்மதி. 'ஆதவனைக் கண்ட தாமரை போல...' என்று சின்ன வயதில் படித்ததற்கு அந்த நிகழ்வு நல்லதோர் பட்டறிவாக இருந்தது.

**ஆணையாளர் அலுவலகத்திற்கு.**

சசிதரனுடன் காவல்துறை ஆணையாளரின் அறைக்குச் சென்றேன். செய்தியாளர்களுடன் பொலிஸார் பழகும் முறை, அவர்களைக் கௌரவிக்கும் விதம் எல்லாவற்றையும் பார்த்தபோது பத்திரிகையாளருக்கு தமிழகத்தில் இருந்த மதிப்பும், மரியாதையும் எத்துணை உயர்வானது என்பதை என்னால் உணர முடிந்தது. (வளரும்)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடாத்தப் பட்ட திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழாவில் திருநாவுக்கரசரின் உருவச் சிலை ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும் காட்சி. (படங்கள்: ஐங்கரன்)

## லெப்.கேணல் சாள்ஸ் நினைவு விளையாட்டுப் போட்டி

(கிளிநொச்சி)

கடற்புலிகளின் முதல்தாக்குதல் தளபதியான லெப்.கேணல் சாள்ஸ் மற்றும் அவருடன் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட லெப். மகான் ஆகியோரது 12ஆம் ஆண்டு நினைவு தினநிகழ்வை முன்னிட்டு மாபெரும் விளையாட்டுப் போட்டி, கலைநிகழ்வுகள் என்பன நடாத்தப்பட்டுள்ளன.

வன்னியில் அமைந்துள்ள கடற்புலி லெப். கேணல நிரோஜன் கலையரங்க மைதானத்தில் போராளி அறிவழகி தலைமையில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் பிற்பகல் 6 மணிவரை இறுதித் தேர்வுக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

இதில் சிறப்பு நிகழ்சசிகளாகப் படையக தொடக்கப்பயிற்சிக் கல்லூரியின் கவிதா நிகழ்வு, சாள்ஸ் படையணியின நடன நிகழ்வு, நவம் அறிவுக்கூட போராளிகளின் இசை நிகழ்வு என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வில் தமிழீழ கடற்படைச் சிறபபுத்தளபதி கேணல் சூசை சிறப்புரையாற்றினா. இந்நிகழ்விற்கு விடுதலைப்புலிகளின் துறைசார் சிறப்புத்தளபதிகள், தளபதிகள், போராளிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் வெற்றியீட்டிய வீராகளுக்கு சிறப்புத்தளபதிகள், பொறுப்பாளர் கள பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனா. (ற)

## கராத்தே சுற்றுப்போட்டி

காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம், புனித பூமி சிறுவர் இல்ல மாணவாகள் மற்றும் முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கராத்தே வீரர்களுக்கிடையிலான கராத்தே சுற்றுப்போட்டி நிகழ்வொன்று அறிவுச்சோலை சிறுவா் இல்ல வளாகத்தில் நேறறு முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு நடை பெற்றது.

கராத்தே ஆசிரியர் வள்ளுவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரத[illegible] நடுவராக தமிழீழ கராத்தே சங்கத் தலைவர் சோதி மாஸரர் கலந்து கொண்டார். (ற)

## பொது நிர்வாகச் சீர்குலைவுக்கு வீண் காலதாமதமே காரணம்

(கொழும்பு)

தீர்மானங்களை எடுப்பதில் ஏற்படும் வீண் காலதாமதமே பொது நிர்வாகத்தின் திறமையைச சீர்குலைத்துள்ளது என பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இத்தகைய நிலைமைக்குத் தீர்வுகாணப் பட வேண்டுமானால் அரசாங்க அதிகாரிகளுக்கு உரிய அதிகாரம் வழங்கப்பட்டு பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒழுங்கு முறைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

சுனாமி அனர்த்தம் காரணமாக சொத்துக்கள் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதம மந்திரி இந்தக கருத்துக்களை வெளியிட்டார்.

அனர்ததத்தின் பின்னர் திட்டமிட்ட அடிப படையில் நிவாரண நடவடிக்கைகளை, விரைவில் மேற்கொண்ட முதலாவது நாடு இலங்கையாகும் என்றும் அவர் அக் கருத்தரங்கில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ற-5)

## 20 ஆயிரம் பயிலுநர் பட்டதாரிகளுக்கு ஜூலை 1 ற்குள் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள பயிலுநர் பட்டதாரிகளுக்கு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பயிலுநர் பட்டதாரிகளாகச் சேர்த்துக கொள்ளப்பட்டோரில பெரும் எண்ணிக்கையிலானோர் ஆசிரியர் சேவையிலேயே ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகப் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் சேவையில் சுமார் 20 ஆயிரம் பயிலுநர் பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவித்த பிரதி நிதியமைச்சா, இநத மாத இறுதிக்குள் இவர்களை நிரந்தரமாக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியாகும் என்றார். (ற-9)

# தரம் – 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல:12 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

வினாத்தாள் - II நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

❖ இவ்வினாத்தாளில் 22 வினாக்கள் உள்ளன.

❖ தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

**(01) கீழே உள்ள இடைவெளிகளைச் சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக.**

(i)(--------------------------) நாளை வீட்டுக்கு வருவேன்.

(ii)(------------------------) இன்று பாடசாலைக்கு வரமாட்டான்.

(iii)(----------------------) இன்று கோவிலுக்கு வருவாயா?

(iv)(-----------------------) எல்லோரும் ஓடி விளையாடினர்.

(v)(------------------------) வரிசையாகச் செல்லுங்கள்.

**(02) கீழே உள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்கள் சார்பாக சரியான விடையைத் தெரிவு செய்க.**

(i)**வரன்** பாடசாலைக்குச் சென்றான்.
1)ஆண்பால் 2)பெண்பால் 3)ஒன்றன்பால்

(ii)வயல்வெளியில் **மாடு** புல் மேய்ந்தது.
1)ஆண்பால் 2)பெண்பால் 3)ஒன்றன்பால்

(iii)கலை விழாவில் **கஸ்தூரி** பாட்டுப் பாடினாள்.
1)ஆண்பால் 2)பெண்பால் 3) பலர்பால்

(iv)துரையப்பா விளையாட்டரங்கில் **விளையாட்டு வீரர்கள்** அணியணியாகச் சென்றார்கள்.
1)ஒருமை 2)பன்மை 3)அ.்றிணை

(v)மேசையின் மீது **புத்தகம்** விரித்தபடி இருந்தது.
1)ஒருமை 2)பன்மை 3)உயர்திணை

**(03) கீழ்வரும் சொற்களை ஒழுங்குபண்ணி கருத்து நிறைந்த வாக்கியம் அமைக்க.**

(i)காயம்பட்ட / வைத்தியர்கள்/ கவனமாகப் /நோயாளியை / பரிசோதித்தனர்.

(----------------------------------------------------------------------)

(ii)கோயிலுமில்லை / சிறந்ததொரு / தாயிற் / மந்திரமில்லை / சொல்மிக்க /தந்தை

(----------------------------------------------------------------------)

**(04) கீழே சில பாடல்களின் முதல்வரி தரப்படுகின்றது. இவை என்ன பாடல் வகை என அருகே உள்ள இடைவெளியில் எழுதுக.**

(i)வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
(----------------------------)

(ii)சிறீ லங்கா தாயே - நம் சிறி லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
(----------------------------)

(iii)சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்
சிலவேளை அதை வந்து கடல் கொண்டு போகும்
(----------------------------)

**(05) பொதுவாக நாம் பயன்படுத்தும் சில முக்கிய குறியீடுகள் வருமாறு.**

முற்றுப்புள்ளி(.) காற்புள்ளி(,) அரைப்புள்ளி(;) முக்காற்புள்ளி(:)
வினாக்குறி(?) வியப்புக்குறி(!) மேற்கோட்குறி(" ")
அடைப்புக்குறி ( )

இக்குறியீடுகளை கீழ்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் இடுக.

(i)நீங்கள் அவனைக் கண்டீர்களா

(ii)நான் இன்று கோயிலுக்குச் சென்றேன்

(iii)பருப்பு அவரை பால் முட்டை ஆகியவற்றில் புரதம் உண்டு

(iv)விளையாட்டு மைதானத்துக்குச் சென்றாள் உடற்பயிற்சி செய்தாள் வீட்டுக்குத் திரும்பினாள்

(v)நல்ல நீருக்குரிய பண்புகளாவன நிறம் மணம் சுவை இன்மையாகும்

(vi)நண்பனே

**(06) கீழ்வரும் விடுகதைகளை வாசித்து விடுவிக்க.**

(i)பார்த்தால் பார்பேன் சிரித்தால் சிரிப்பேன் அழுதால் அழுவேன் நான் யார்?
(---------------------------------------------------------)


(ii)அண்ணன் தம்பி இருவர். அவர்கள் சேர்ந்திருக்கும் நேரத்தை விடப் பிரிந்திருக்கும் நேரம் தான் அதிகம்.
(---------------------------------------------------------)

**(07) கீழவரும் அட்டவணையில் முதலாவது நிரையில் காட்டப்பட்டுளள உணவுப் பொருடகள் எந்த வகையைச் சார்ந்தவை என்பதைக் காடட உரிய கூட்டினுள் (✓) என்னும் அடையாளத்தை இட்டுக் காட்டுக. உதாரணத்துக்கு ஒன்று செய்து காட்டப்பட்டுள்ளது.**

| | உணவுப் பொருள் | பழங்கள் | இலைக்கறி | காய்கறி | கிழங்குப் பயிர் | வாசனைப் பொருள் |
|---|---|---|---|---|---|---|
| | உ+ம் வெண்காயம் | | | | | ✓ |
| (i) | வாழைப்பழம் | | | | | |
| (ii) | அகத்தி | | | | | |
| (iii) | பச்சை மிளகாய் | | | | | |
| (iv) | புடலங்காய் | | | | | |
| (v) | பப்பாசிப்பழம் | | | | | |
| (vi) | கீரை | | | | | |
| (vii) | மரவள்ளி | | | | | |
| (viii) | பூசணிப்பழம் | | | | | |
| (ix) | கரட் | | | | | |
| (x) | கறிவேப்பிலை | | | | | |

**(08) மிகவும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

(i)



இப்பரிசோதனையின் முடிவு
1) வளிக்கு நிறை உண்டு
2)வளிக்கு இடத்தை அடைக்கும் ஆற்றல் உண்டு
3)வளியை நாம் பார்க்க் முடியும்

(ii)



இந்த அங்கி சார்பாகச் சரியானது
1)இது நன்னீரில் வாழும்
2)இது நோய் பரப்புவதில் ஈடுபடும்
3)கோடைகாலத்தில் அதிகமாகப் பெருகும்.

(iii)



இது உணவு தயாரிக்கப் பயன்படும் இப்பொருள் தொடர்பான கூற்றுக்களில் தவறானது.
1)கைபிடி இரும்பாலானது
2)கைபிடி மரத்தாலானது
3)கரண்டிப்பாகம் இருப்பாலான்து

(iv)கீழ்வரும் இரும்பு ஆணிகளுள் மிகவும் மங்கியுள்ள ஆணி




(1) (2) (3)

**(09) கீழவரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் "R" எனவும் பிழையாயின் "W" எனவும் எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.**

(i)'சுனாமி' என அழைக்கப்படும் கடல் கொந்தளிப்பால் பல மக்கள் 'அழிக்கப் பட்டதுடன் அவர்கள் சொத்துடைமைகளும் சேதமாகிய சம்பவம் அண்மையில் இடம்பெற்றது. ☐

(ii)காய்ந்த மரம் ஒரு சிறந்த மின்கடத்தி ஆகும். ☐

(iii)நிறையுணவு என்பது எல்லாப் போசணைப் பெறுமானங்களும் கொண்ட உணவாகும். ☐

(iv)களிமண் துணிக்கைகள் கைக்கு சொரசொரப்பானவை மிகவும் பெரியவை. ☐

(v)இரவில் மலரும் பூக்கள் பொதுவாக வெள்ளை நிறமானவை. ☐

**(10) உமக்கு ஒரு தினக்குறிப்பு (டயறி) பரிசாகக் கிடைத்துள்ளது. அதன் முன் புறத்தில் பின்வருமாறு காணப்பட்டது. இதில் உமக்குப் பொருத்தமானவற்றை ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆங்கிலத்தில் நிரப்புக.**

**(i)Name** :- ------------------------------------------------

**(ii)Date of Birth** :- ------------------------------------------------

**(iii)Address** :- ------------------------------------------------

**(iv)School** :- ------------------------------------------------

**(v)Grade** :- ------------------------------------------------

**(vi)Telephone No** :- ------------------------------------------------

**(vii)Blood Group** :- ------------------------------------------------

**(11) பொருத்தமான கூட்டுக்குள் (X) புள்ளடி அடையாளம் இடுக.**

| | வாத்தியக்கருவி | நரம்புக்கருவி | வளிநிரல்கருவி | தோற்கருவி |
|---|---|---|---|---|
| (i) | வீணை | | | |
| (ii) | மேளம் | | | |
| (iii) | புல்லாங்குழல் | | | |
| (iv) | வயலின் | | | |
| (v) | உடுக்கு | | | |

**(12) கீழே தரப்பட்டுள்ள அளவீடுகளுடன் தொடர்புடைய அளவு கருவிகளின் பெயர்களை எழுதுக.**

(i)கிலோ கிராம் (-----------------------------------)

(ii)மீற்றர் (-----------------------------------)

(iii)செக்கன் (-----------------------------------)

**(13) வீடுகளில் அவதானிக்கத்தக்க பின்வரும் பொருட்களின் கணிதப் பெயர்களை எழுதுக.**

(i)செங்கல் (-----------------------)
(ii)கட்டிப்பாற்பேணி (-----------------------)
(iii)தேசிப்பழம் (-----------------------)
(iv)தாயக்கட்டை (-----------------------)
(v)பப்படம் (-----------------------)
(vi)சீனி கட்டிய சுருள் (-----------------------)

(07 ஆம் பக்கம் பார்க்க...)

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினாத்தாள் இல:10

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

| | |
|---|---|
| 01.ஜெ.மதுஷனா | யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம். |
| 02.பு.பிருந்தாபன் | யா/வட்டு யாழ்ப்பாணக கல்லூரி. |
| 03.அ.றொஷாணி | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 04.செ.அனோஜன் | யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். |
| 05.பி.பிரியா | யா/வண்.நாவலர் மகாவித்தியாலயம். |
| 06.ஜெ.சுஜனிகா | யா/மானிப்பாய் மெமோறியல் நவோதயா கல்லூரி. |
| 07.ச.திலக்ஷி | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 08.கி.மாதுளா | யா/நெல்லியடி.மெ.மி.த.க. பாடசாலை. |
| 09.பி.சகானா | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 10.கு.சரணயா | யா/ஞானசாரியார் கல்லூரி. |
| 11.செ.துவாரகா | யா/ஏழாலைமேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம். |
| 12.ஸ்ரீ.ஸ்னேகா | யா/மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை. |
| 13.க.போல்றாஜ் | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 14.ச.நிருசிகா | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. |
| 15.ஸ்ரீ.பிரசாந் | யா/பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம். |
| 16.சி.மணிமாறன் | யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம். |
| 17.கு.அலெக்ஸ் | யா/மத்திய கல்லூரி. |
| 18.ற.கீர்திகேசன் | யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை. |
| 19.சி.நிலக்ஷன் | யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி. |
| 20.வி.சிந்துஜன் | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 21.க.சங்கீதா | யா/பரு.வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி. |
| 22.நா.தனோஜன் | யா/நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை. |
| 23.கு.சுரேன் | யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம். |
| 24.சி.கவியா | யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம். |
| 25.வி.ஆரணி | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 26.சொ.துசியவேணி | யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம். |
| 27.மு.விமலலோசிகா | யா/ஞானசாரியார் கல்லூரி. |
| 28.தீ.திவ்வியா | யா/ஞானசாரியார் கல்லூரி. |
| 29.சு.லக்ஷனா | யா/இருபாலை சீ.சீ. பாடசாலை. |
| 30.சி.கேமாவதி | யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தி. |
| 31.பி.பிரசாந்தி | யா/ஞானசாரியார் கல்லூரி. |
| 32.சி.கோமதி | யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம். |

## வினாத்தாள் 10 இன் விடைகள்

**01.** i) ✔ ii)X iii) ✔ **02.** i)தம்பி, படியுங்கள், அம்மா, ஐயா!, போய் வாருங்கள். ii)செவிடன், போடீ. மலடி, தடியன், மூதேவி iii)கோபம்

**03.** i)அழுகை ii)சந்தோசம் iii)ஏமாற்றம் iv)கோபம்

**04.** i)மது அருந்துதல் ii)புகைப்பிடித்தல்

**05.** i)மீன்கள் ii)வருவார்கள் iii)எதிர்காலம்

**06.** i)கிறீஸ்தவர்கள் ii)தபால்சேவை iii)முஸ்லிம்கள் iv)நோயாளர்கள் v)ஒரு வருடம்

**07.** i)அகதிகள் ii)வேடர் iii)பரதேசிகள்

**08.** i)(3) ii) (3) iii)(2) iv)(3) v)(2)

**09.** i)உ ii)த iii)உ iv)உ v)உ

**10.** i)மணல்மண் ii)களிமண் iii)நன்மண் /இருவாட்டிமண்

**11.** i)பனை ii)நெல் iii)பயறு iv)பலா


**12.** i)(1) ii)(2) iii)(1)

**13.** i)0.2 ii)3.25 iii)0.25 iv)0.2, 0.25, 8, 1, 3.25 v)3.25, 1, 0.8, 0.25, 0.2

**14.** i)இருசமபக்கமுக்கோணி ii)செவ்வகம் iii)சமபக்கமுக்கோணி iv)சதுரம் v)வட்டம்

**15.** i)kg ii)m iii)s, m iv)ml v)cm

**16.**




**17.** i)15 - 10 = 5 ii)10x 5 = 50 iii)10 +0 = 10 iv)10x 0 = 0 v)15 - 0 = 15

**18.** i)சமபக்க முக்கோணி ii)சதுரம் iii)கோளம் iv)சதுரமுகி v)நான்முகி

**19.** i) 2 ii)2 iii)1 iv)1,4,9 v)1,3

**20.** i)நாநூறு ii)முப்பது iii)இரண்டாயிரம் iv)பத்தாயிரம் v)மூன்று

**21.** i)கிழக்கு ii)மேற்கு iii)வடகிழக்கு / ஈசான மூலை iv)நிருதிமூலை v)கிழக்கு

**22.**
- எழுத்துப் பிழைகளின்றி இருத்தல்.
- கூறியது கூறலாக இருக்கக் கூடாது.
- தலைப்பிற்குப் பொருத்தமானதாக இருக்கவேண்டும்.
- எழுத்து மொழியில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)


**(14)** (i)நிலைக்குத்துத் தளங்களுக்கு 02 உதாரணம் எழுதுக.

(------------------------------) (------------------------------)

(ii)கிடைத்தளத்திற்கு 02 உதாரணம் எழுதுக.

(------------------------------) (------------------------------)

**(15)** வரைபை நன்கு அவதானித்து விடை எழுதுக.




4 ஆகாயவிமானங்களை ஓர்  குறிக்கின்றது

(i)ஆகக் கூடிய விற்பனைக்கும் ஆகக் குறைந்த விற்பனைக்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு? (------------------------------)

(ii)ஐந்து நாட்களிலும் விற்கப்பட்ட ஆகாய விமானங்களின் எண்ணிக்கை யாது? (------------------------------)

**(16)** இவ்வெண்களை இலக்கங்களில் எழுதுங்கள்.

(i)நூற்றுத் தொண்ணூறாயிரத்து அறுபத்தைந்து (----------------------------)

(ii)இருநூற்று அறுபதாயிரத்து நானூற்று முப்பது (----------------------------)

(iii)நானூற்றுத் தொண்ணூற்றொன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது (----------------------------)


**(17)** பின்வரும் கால எல்லைகளில் உள்ள நாட்களின் எண்ணிக்கையைக் காணுங்கள்.

(i)யூன் 15 தொடக்கம் யூன் 30 வரை (-------------------)

(ii)ஜனவரி 1 தொடக்கம் பெப்ரவரி 15 வரை (-------------------)

(iii)யூன் 10 தொடக்கம் ஆகஸ்ட் 25 வரை (-------------------)

**(18)** கடை ஒன்றிலே சவர்க்காரக்கட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள விதம் இப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.




(i)கோலத்திற்கேற்ப 5 ஆவது நிரையில் வைக்கப்பட வேண்டிய சவர்க்காரக் கட்டிகள் எத்தனை? (-------------------)

(ii)5ஆவது நிரையைப் பூரணப்படுத்திய பின்னர் உள்ள சவர்க்காரக் கட்டிகளின் மொத்த எண்ணிக்கை யாது? (-------------------)

(iii)கோலத்திற்கேற்ப 6ஆவது நிரையில் எத்தனை சவர்க்காரக் கட்டிகள் வைக்கப்பட வேண்டும்? (-------------------)

**(19)** மூன்று பூப்பாத்திகளின் நீளங்கள் பின்வருமாறு.

உதாரணம் $2m, 2\frac{1}{4}m, 1\frac{3}{4}m$

(i)நீளம் கூடிய பாத்தியின் நீளம் என்ன? (-------------------)

(ii)நீளம் குறைந்த பாத்தியின் நீளம் என்ன? (-------------------)

(iii)பாத்தியின் நீளங்களை ஏறுவரிசையில் ஒழுங்கு படுத்தி எழுதுங்கள். (-------------------)

**(20)** பெரிய பாத்திரம் ஒன்றில் 3l 528ml மண்ணெண்ணெய் இருக்கிறது. சிறிய பாத்திரம் ஒன்றில் 2l 226ml மண்ணெண்ணெய் இருக்கிறது. சிறிய பாத்திரத்தைவிடப் பெரிய பாத்திரத்தில் எவ்வளவு மண்ணெண்ணெய் கூடுதலாக இருக்கிறது. (---------------------)

**(21)** ஆறு மாதங்களுக்கு முன்னர் ஒரு பிள்ளையின் நிறை **20kg 608g** ஆகும். தற்போது அப்பிள்ளையின் நிறை **24kg 125g** ஆகும். ஆறுமாதங்களிற்குக் கூடிய நிறையைக் காணுங்கள். (---------------------)

**(22) 'நான் சுற்றுலா சென்றபோது...' என்னும் பொருளில் சரியான எழுவாய் பயனிலைகளுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.**

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 12

**மாணவர் முழுப்பெயர் :** ..................................

**பாடசாலையின் பெயர் :** ..................................

**வீட்டின் முகவரி :** ..................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 21.06.2005 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 12
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக் எழுதவும்.

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 22

1956யூன் ஐந்தில் நிறைவேற்றப்பட்ட ''சிங்களம் மட்டும்'' சட்டமூலத்தை எதிர்த்துத் தமிழ்த் தலைவர்கள் தமிழரசுக்கட்சி தலைமையில் தமிழபிமானிகளின் ஆதரவுடன் பாராளுமன்றிற்கு எதிரிலுள்ள காலிமுகத்திடலில் நடாத்திய சத்தியாக்கிரகம் குண்டர்களால் குழப்பப்பட்டதும், அதனைத் தொடர்ந்து கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் வெடித்ததும் கலவரத்தையேற்படுத்தியதெனலாம். காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் பற்றிய நாவேந்தனின் கருத்தானது பின்வருமாறு அமைந்துள்ளது.

'1956யூன் ஐந்தாம் நாள் பாராளுமன்றத்தில் 'சிங்களம் மட்டும்' சட்டம் உருவாக்கப்பட்டு நிறைவேறியது. தமிழர்கள் அத்தினத்தைத் துக்க தினமாகக் கொண்டாடினர். தமிழரசுக்கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் 'சிங்களம் மட்டும்' சட்டத்தை எதிர்த்து கொழும்பு 'காலிபேஸ்' (காலிமுக) மைதானத்தில் சத்தியாக்கிரகஞ் செய்தனர். சிங்களக் காடையர்களும், புத்த பிக்குகளும், அரசியல் யோக்கியதையே இல்லாத இராசரத்தினாக்கும்பலும் சத்தியாக்கிரகிகளை அடித்து, உதைத்து, சித்திரவதை செய்தனர். சத்தியாக்கிரகிகளின் உடைகளைக் கிழித்தனர், உடமைகளைப் பறித்தனர், காதுகளைக் கடித்தனர், கைகளை முறித்தனர். அப்பப்பா! இத்தனை கொடுமைகளையும் பாரிற்கு 'பஞ்சசீல' உபதேசஞ்செய்யும் பண்டாரநாயக்கர் அரசாங்கம் பார்த்துக் கொண்டுதானிருந்தது. மறைமுகமாகவும் பகிரங்கமாகவும் ஆதரவளிக்கக்கூடத் தயங்கவில்லை. கல்லோயாவிலும், கொழும்பிலும் பிற பகுதிகளிலும் தமிழர் படுகொலை செய்யப்பட்டனர். கொள்ளை அடிக்கப்பட்டனர். கொடுமைகளுக்காளாகினர் தொடர்ந்தன இத்தகைய தொல்லைகள்.'

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட வன்முறைகள் இன்றளவும் தொடரவே செய்கின்றன. இதிலிருந்து பற்றவைக்கப்பட்டுள்ள இனத்துவேஷத் தீயானது காலத்துக்குக் காலம் எண்ணெய் வார்க்கப்பட்டு இந்நாடு முழுவதையும் பொசுக்குமளவுக்கு வளர்த்தெடுக்கப்பட்டுள்ளதென்றால் அது மிகையாகாது.

1957பெப்ரவரி 4ஆம் நாளில் திருகோணமலை சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் ஏற்றிய சிங்கக் கொடியை பறிக்கமுயன்ற திருமலை நடராசன் சுட்டுக்கொல்லப்பட்டமையும், தொடர்ந்து ஆகஸ்ட்போருக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி தயாராகிக் கொண்டிருந்த வேளையில் பண்டா-செல்வா ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டமையும், பின்னர் அது கிழித்தெறியப்பட்டமையும் கசப்பான அனுபவங்களேயாகும். இந்நிலையில் 1958ஏப்ரலில் ஆரம்பித்த சிறீ எதிர்ப்பும் அதன் மீதான தொண்டர்களின் வழக்குகளும் ஒருபுறமிருக்க, 1958மேத்திங்கள் 23, 24,25ந் தேதிகளில் வவுனியாவில் தமிழரசுக்கட்சியின் தேசிய மாநாடு நடைபெற்றது. தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கான திட்டங்கள் பல அதில் வெளியிடப்பட்டன. இதன் பிரதிபலிப்பாகவே தமிழ்-சிங்களக் கலவரம் உருவாகலாயிற்று. மாநாட்டில் கலந்துகொள்ள மட்டக்களப்பிலிருந்து வந்தவர்களெல்லாம் பொலநறுவையில் புகைவண்டியில் வைத்துக் கொடுமைப்படுத்தப்பட்டனர். கொழும்பு, மட்டக்களப்பு, பொலநறுவை, பதுளை, குருநாகல் பாணந்துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் இக்கலவரம் மோசமாக நிகழ்ந்தது. கொலைகள், கற்பழிப்புகள், தீயிடல், கொள்ளைகள் புகையிரதத்தடம் புரட்டல் என்பன தாராளமாகவே நடந்தேறின. கலவரங்களினால் 12,000 தமிழர்கள் அகதிமுகாமில் தஞ்சமடைந்து பின்னர் யாழ்ப்பாணம் கப்பல மூலமாக அனுப்பப்பட்டனர். இவ்வாறு நாவேந்தனின் நூலானது மேலும் கூறுகிறது. 1961இல் தமிழ் மக்கள் அரசாங்கத்துக்கெதிராக மேற்கொண்ட சத்தியாக்கிரக இயக்கத்தையும், சட்டமறுப்பு இயக்கத்தையும் ஆயுதப்படைகளும் பொலிஸாரும் தடுத்து நிறுத்துகையில் தாக்குதல்களுக்குப் பலர் ஆளாகிக் காயமடைந்தனர். சில மாதங்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆட்சி நடைபெற்றது. பல தமிழ்த் தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதிநாள் நிகழ்வில் ஒன்பதுபேர் கொல்லப்பட்டமையும் அது சம்பந்தமான பொலிஸாரினது செயற்பாடுகளும்கூட அரசாங்கத்திற்கெதிரான தமிழ்பேசும் மக்களது உணர்வை அதிகரிக்கச் செய்ததெனலாம். 1976 ஐப்பசி 2இல் புத்தளம் பள்ளிவாசலில் கூடியிருந்த தமிழ்பேசும் முஸ்லிம்கள் மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யப்பட்டதால் ஆறு முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை பற்றி அப்போதைய அரசு, விசாரணைக்குழு எதனையும் நியமிக்காமையும் குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்களுக்கெதிரான குழப்பங்கள் 1982இல் காலி, புத்தளம் போன்ற பகுதிகளில் மீளவும் இடம்பெற்றமையும் தொடர்ந்தும் நீறுபூத்த நெருப்பாகப் பலவிடங்களில் இடைக்கிடை தோற்றம் பெறுவதனையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியானது மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஆட்சிக்கு வந்ததாயினும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற நிலையைச் சிறுபான்மைக் கட்சியைச் சேர்ந்த தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் அ.அமிர்தலிங்கம் அடையும் வாய்ப்பானது, இதுவரை காலமிருந்த நிலையை மாற்றியமைத்தது. 1977இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கமானது முதலில் இன அமைதி குன்றிய நிலையில் தமிழ்-சிங்கள கலவரம் ஒன்றை எதிர்கொண்டது. இக் கலவரத்தில் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்களது உயிர், உடமைகளுக்குப் பலத்த சேதமேற்பட்டது. இத்தாக்குதல்களினால் முதன் முறையாக மலையகத் தமிழர்களும் பாதிப்புக்குள்ளாயினர். அரசினரின் ஆயுதப் படையினரும், வெகுசனத் தொடர்பு சாதனங்களும், விவேகமற்ற அரசியல்வாதிகளும் தமிழர்கள் மீதான தாக்குதல்களுக்கு ஊக்கமளித்தமை பற்றிய குற்றச்சாட்டுகளும் எழுந் தன. இரண்டாவது தடவையாகத் தமிழர்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிக் கப்ப லில் அனுப்பப்பட்டனர். இதையடுத்து 1979,1981, 1983ஆகிய ஆண்டுகளில் தமிழர் களுக்கெதிராக இனக்கலவுரங்கள் ஏற்பட்டன. 1983ஐத் தொடர்ந்து நிகழும் நிகழ்ச்சி கள் மகிழ்ச்சி தருவ தாயில்லை. தொடரான வன்முறைகளும், கலவரங்களும், ஒடுக்கு முறைகளும் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

தமிழரசுக் கட்சியினதும், தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் தலைவராக விளங்கிய, பெருமளவிலான தமிழ்பேசும் மக்களால் 'தந்தை' என்று அழைக்கப்பட்ட எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் 1977இல் காலமானதையடுத்து அவரது அஸ்தியானது திருகோணமலைக்கு எடுத்துச்செல்லப்பட்டபோதும் சிங்கள-தமிழ்க் கலவரம் அங்கு மூண்டமை குறிப்பிடக்கூடியது. இதையடுத்து 1977ஆம் ஆண்டின் ஆகஸ்ட்டில் இடம்பெற்ற கலவரத்தினைப்பற்றி 'போரா? சமாதானமா?' என்ற நூலின்


''இனவாத வன்செயல்கள் அதிக அளவில் இடம்பெற்றன.
தீயிடல், கொள்ளைகள் என்பன
பெருமளவில் நடைபெற்றன. பொலிஸாரும், ஆயுதப்
படையினரும் இவ்வன்செயல்களைத் தடுப்பதற்குப்
பதிலாக அவற்றை மேலும் தூண்டிவிட்டனர்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (தொடரும்)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாக பூசணி அம்மன் பாமாலை

### எட்டாம் திருவிழா



## அருள் தருவாய் நயினைமாதா

பேரான பிரணவரின் தாயே! நல்ல
அடியவர்மேல் அன்பு மறவாத தேவி!
நேரான தந்தையும் நீ மற்றுமுள்ள
நெறியாளர் எத்தனையோ எல்லாம் நீயே
தீராத தொன்றுமில்லைக் கடைக்கண் பார்த்தால்
திருப்பேறும் அருட்பேறும் அடைவோம் நாங்கள்
மாருத தமிழ் மலராம் மாலை தந்தோம்
மகிழ்ந்தேற்று அருள்தருவாய் நயினை மாதா!

கவிமணி கந்த முருகேச தாசனார்

## இத்தனையும் வேண்டும் நாகபூசணி

தீவகத்தின் நாயகியே நாகபூசணியே
தேசத்திற்கு விடுதலை தாராயோ
ஆசையாய் எம்முன்னோர் வாழ்ந்த மண்ணில்
அடிமையாய் வாழ்வது முறையோ அம்மா
பூசை புனர்க்கரகம் செய்து வாழ்ந்த இனம்
பூண்போடு அழிவது நியாயம் தானோ...?
வாஞ்சையுடன் உன் உயர்விழாவில் கோரிக்கையிது
வடகிழக்கு தமிழருக்கு ஆகவேண்டும்
வரலாறு சிதையாது வழங்கவேண்டும்
நடக்கின்ற போராட்டம் நிற்க வேண்டும்
நலமான பேச்சிங்கே தொடரவேண்டும்
நல்லதோர் தீர்விங்கே சேரவேண்டும்

மதுரகவி

## மனங்கொள்ள மலரும் மனைப்பேறு

நயினை நினைந்து நலமற் திரமொடு
இயலும் மலர்தூ இன்பம் பெருகுமே

மணிபல் லவத்தீவில் மகிழும் மணிதன்னை
துணிந்து தொடரத் தொடரா வினைதானே

கனிந்த மனமாய் கவராது கரங்கூப்பி
கனிந்த கனிதூவ கனிவாள் கருணையார்

நாளும் நவின்றேத்த நல்ல நயினைத்தாய்
கோளும் கொடுங்கூற்றும் குறுகா குறிகொள்வாள்

எயிலை எரிசெய்த எம்பிரான் இடப்பாக
மயிலை மனங்கொள்ள மலரும் மனைப்பேறு

சிவ.சண்முகவடிவேல்

## மோகம் கெடுத்து ஆண்டு அருள்

நோக்கம் உயர்வாக நெஞ்சில் நிறைந்திடவும்
வாக்கும் செயலும் சிறந்திடவும்-பூக்கொண்டு
நாகம் துதிசெய் புவனேஸ் வரித்தாயே
மோகம் கெடுத்தாண் டருள்

சண்

# கள்ளக் காதலுக்குப்

## கொலையும் செய்வாள் பத்தினி

ஆதாம் ஏவாள் காலம் தொடக்கம் ஆனந்தன் - ஜெயகவிதா காலம் வரை வாழுகின்றது காதல். இந்தக் காதலை, கதைகளிலும், கட்டுரைகளிலும், கவிதை களிலும் மிகைப்படுத்திக் காதல் புனித மானது; தெய்வீகமானது என வர்ணித்து, அதைக் காதலர்கள் நிஜமாகவே கொண்டா டுகிறார்கள் எனக்கூறி வருவது அக்காலம் முதல் இக்காலம் வரை நடந்து வரும் சம்ப வமாகும்.

காதலில் தோல்வியுற்றவர்கள் பலர். ஜெயித்தவர்கள் சிலர். இந்தச் சிலரில் ஒரு வன் தான் ஆனந்தன். இவன் ஜெயகவிதா என்ற பெண்ணிடம் காதல் வயப்பட்டு, அவ ளையே திருமணம் முடித்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான்.

ஆனால் ஜெயகவிதா? கட்டிய கணவ னை விட்டு கள்ளக்காதலன் மீது காமம் கொண்டு, கள்ளக் காதலன் அருணோடு சேர்ந்து தன்னை உயிருக்குயிராகக் காதலித்த தன் கணவன் ஆனந்தனைக் கொலை செய் திருக்கிறாள் இந்தப் பத்தினி.

### ஆனந்தன் கட்டிய தாஜ்மஹால்

சென்னை பல்லாவரத்தையடுத்து உட் செல்லும் பவானி நகரில் உள்ளது ஆனந்த னின் வீடு. ஆனந்தன் தன் அன்பு மனைவிக் காகக் கட்டிய வீடு. அவ் வீட்டின் வெளித் தோற்றம் எளிமையாகவிருந்தாலும் உள்ளே பளபளக்கும் கற்களைப் பதித்து, அலங் காரப் பொருட்களை அடுக்கி வைத்து தன் மனைவி ஆசைப்பட்ட பொருட்களையெல் லாம் வாங்கிக் குவித்து இருக்கிறான் ஆனந் தன்.

இல்லாதிருந்த நிர்மலா கோவிலில் மஞ்சள் கயிறு விற்றுப் பிழைப்பு நடத்தி வந்தாள். ஆனந்தன் பணக்காரன். அவனை வளைத் துப் போட்டுத் தன் மகளை அவனுக்குக் கட்டி வைத்துவிட்டாள் சொகுசு வாழ்க்கை யைத் தானும் வாழலாம் என்று நினைத்தி ருக்கிறாள் நிர்மலா. ஊரிலே நிர்மலாவின் நடத்தையைப் பற்றி அவ்வளவாக நல்லவிப் பிராயம் இல்லை. நிர்மலா நடத்தை கெட் டவள் என்பது தான் ஊராரின் பொது அபிப் பிராயம்.

### மெல்லப் புகுந்த சனியன்

வியாசர்பாடியில் ஜெயகவிதாவுடன் தனிக்குடித்தனம் நடத்திய ஆனந்தன்! பொரிச் சாலூரில் நிலம் வாங்கி வீடு கட்ட ஆரம் பித்தான். அந்த வீட்டைக்கட்ட அருகிலுள்ள அருண் ஹார்ட்வெயரில் சிமெந்து, செங்கல், மணல், இரும்பு, ஜல்லி வாங்கிச் செல்ல அப்பொழுது அறிமுகமானவன்தான் அந்தக் கடையின் உரிமையாளனான அருண்.

கடையில் ஆரம்பித்த பழக்கம் வீடு வரை நீண்டது. அடிக்கடி ஆனந்தனின் வீட்டுக்கு வந்து போக ஆரம்பித்தான் அருண். நட்பு ரீதியில் அதை ஆனந்தனும் அனு மதிக்க அங்கிருந்துதான் ஆரம்பமானது பிரச்சினை.

ஆனந்தன் வேலைக்குப் போய்விட, ஜெயகவிதா அருணிடம் வீட்டின் கரண்ட் பில், டெலிபோன் பில்களைக் கட்ட அருணி டம் உதவி கேட்டிருக்கிறாள் ஜெயகவிதா. அருணும் செய்திருக்கிறான்.

மறந்து விடச் சொல்லி மீண்டும் சமா தானம் செய்திருக்கிறான். தன் மனதிலுள்ள குழப்பத்தையும் மனம் படும் வேதனையை யும் குமுறல்களையும் யாரிடம் பகிர்ந்து கொள்வது என்று தெரியாமல், ஆனந்தன் இரவு பகலாகத் தூக்கமின்றித் தவித்தி ருக்கிறான். கோவிலுக்குச் சென்று 'என் மனைவிக்கு நல்ல புத்தியைக் கொடு' என்று மனமுருகி வேண்டியிருக்கிறான்.

### தாய்க்குத் தெரிந்த மகளின் கள்ளக்காதல்

ஏழு வருட காலமாகத் தன் மனைவிக் குக் கள்ளத் தொடர்பு இருப்பது ஆனந்த னுக்கு மட்டும்தான் தெரியுமா? இல்லை ஆனந்தனைத் தவிர மற்ற எல்லோருக்கும் தெரியும். ஜெயகவிதாவின் தாய் நிர்மலா உட்பட.

சம்பவம் நடந்த அன்று கூட, கட்டிய மனைவியுடன் சந்தோஷமாக வாழவேண் டும் என்ற எண்ணத்தில் கட்டிலில் அவன் கண்ட காட்சிகளை மனதில் போட்டுப் புதைத்துவிட்டு ஜெயகவிதாவுடன் அன் பாகவும் கனிவாகவும் பேசியிருக்கிறான் ஆனந்தன்.

அது மட்டுமன்றி, தன் மனைவியை அழைத்துச் சென்று அவள் ஆசைப்பட்ட நகைகளையும், புடைவைகளையும் வாங் கிக் கொடுத்திருக்கிறான். கோவிலுக்கும்

பிணமாகக் கிடப்பதைப் பார்த்துச் சிறிதும் பதறாமல் தன் மகளையும் மகளின் கள் ளக்காதலனையும் காப்பாற்ற ஒரு கட்டுக் கதையை ஜோடித்திருக்கிறாள்.

தலையில் இரத்த காயங்களுடன் தள்ளாடிய நிலையில் வெளியிலிருந்து வந்த ஆனந்தன் வீட்டுக்குள் வந்ததும் மயங்கி விழுந்து உயிரை விட்டுவிட்டான். வெளி யில் அவனை யாரோ பயங்கரமாத் தாக்கி இருக்கிறார்கள் என்று ஒரு கதையை ஜோடித் திருக்கிறாள் நிர்மலா. ஆனால் நினைத்தது ஒன்று நடந்தது வேறொன்று.

ஆனந்தனின் கழுத்திலும் முகத்தி லும் நகக் கீறல்காயங்கள், நெற்றியிலும் பின் மண்டையிலும் இரத்தக்காயங்கள் யாரா வது ஒழிந்து நின்று தாக்கியிருந்தால் நகக் கீற்றுக் காயங்கள் எப்படி ஏற்படும். இதனைப் பார்த்த பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. துருவித் துருவி ஆராயத் தொடங்கியிருக்கிறது பொலிஸ்.

### பொலிஸ் விசாரணையில் வெளியான உண்மை

விசாரணை முடுக்கி விடப்பட்டது. விசாரணையில் அருண் - ஜெயகவிதா கள்ளக் காதல் அம்பலமானது. பொலிஸ் அவர்கள் இருவரையும் துருவித்துருவி விசாரித்ததில் தாங்கள் உல்லாசமாக வாழ

# பலியான கணவன்

### வாழ்விலே புகுந்த வஞ்சகி

இப்படியொரு அற்புதமான வீட்டில் அன்பான கணவனுடனும் தன் அழகான குழந்தையுடனும் வாழ ஜெயகவிதாவுக்கு ஏன் பிடிக்கவில்லை?

முதலில் ஆனந்தனுக்கும் ஜெயகவிதா வுக்கும் எப்படிப் பழக்கம் ஏற்பட்டது? ஆனந் தன் செல்லமாக வளர்ந்தவன். இவனுடன் பிறந்த நான்கு உடன்பிறப்புக்களும் ஒன்றன் பின் ஒன்றாக இறந்து விட்டதனால் ஆனந் தன் ஒருவன்தான் உயிருடனிருக்கும் மகன். தந்தை தனியார் கம்பனியில் வேலை பார்த் துக் கொண்டிருந்தார். அவர் இறந்த பின் அதே கம்பனியில் ஆனந்தனுக்கு வேலை கிடைத்தது. மாதம் 12 ஆயிரம் ரூபா சம் பளத்தோடு மகிழ்ச்சியுடன் வாழ்ந்துகொண்டி ருந்த ஆனந்தனின் வாழ்வில் ஜெயகவிதா உதயமானாள்.

யார் இந்த ஜெயகவிதா? உறவு வழி யிலேயே பிரச்சினை. தந்தை வழியிலே ஒரு முறை. தயார் வழியிலே இன்னொரு முறை. தந்தை வழியில் முறைப்பெண். தாய் வழியில் சகோதரி. முரண்பட்ட முறை யில் இவர்கள் காதல் வளர்ந்தது.

ஆனந்தனின் தாய் மற்றும் உறவினர் கள் ஜெயகவிதாவை அறவே வெறுத்தார் கள். அவளைத் திருமணம் செய்யவேகூடாது எனக் கண்டித்தார்கள். ஆனால் காதலுக் குத் தான் கண் இல்லையே! காதல் போதை ஆனந்தனின் கண்களை மறைத்தது. ஜெயக விதாவைத் திருமணம் முடிக்க முடிவு செய் தான்.

வேலை விஷயமாக வெளியூர் செல்வதாக வீட்டில் பொய் சொல்லிப் புறப் பட்டான். தன் தாய் மற்றும் சொந்தபந்தங் களுக்குத் தெரியாமலே ஜெயகவிதாவைத் திருமணம் முடிக்க ஏற்பாடுகள் செய்தான்.

30.10.1998ஆம் ஆண்டு திருமணம் முடிந் தது. ஜெயகவிதாவைத் தன் விட்டுக்கு அழைத்து வந்தான் ஆனந்தன். மூன்றே மூன்று நாட்கள் அவன் வீட்டில் தங்கியிரு ந்த ஜெயகவித்ர் தன் தாய் நிர்மலாவின் திட்டப்படி ஆனந்தனைப் பிரித்து தனிக்குடித் தனம் சென்றாள்.

ஜெயகவிதாவை ஆனந்தனுக்குத் திருமணம் முடிக்கத் திட்டம் தீட்டியவளே அவள்து தாய் நிர்மலாதான். கட்டிய கண வன் விட்டுவிட்டு ஓடிவிட ஆண் துணை

### கட்டில் வரை சென்ற பழக்கம்

இப்படித்தான் ஜெயகவிதாவுக்கும் அரு ணுக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அந் தப் பழக்கம் கட்டிலறை வரை இழுத்துச் சென்றது. கள்ளக் காதல் மயக்கத்தால் கட் டிய கணவனை மறந்து கள்ளக் காதல னோடு உலகத்தையே மறந்தாள் ஜெய கவிதா. நாட்கள் நகர்ந்தன. வருடங்கள் ஓடின. இரண்டு வருட காலம் கள்ளத் தொடர்பு நீடித்தது.

### காமுகனும் கன்னியும்

ஒருநாள் ஆனந்தன் பார்வையில் தன் அன்பு மனைவியும் நண்பன் அருணும் கட் டிலில் ஒட்டியிருந்த காட்சி தென்பட்டது. உல கமே இருண்டது ஆனந்தனுக்கு. தன் மனை வியா? தான் நேசித்து உயிருக்கு உயிராக வாழந்தவளா இன்று தான்இருக்க வேண்டிய கட்டிலில் மற்றவனோடு... என எண்ணிய வன் அழுதான். புலம்பினான். பின் அமைதி யானான். தனக்குத துரோகம் செய்த மனை வியை விட மனமில்லாமல், நடந்ததை மறந்து விடு இனி இதுபோல் நடக்காமல் பார்த்துக் கொள் என்று புத்திமதிகள் சொல்லிப் பெருந் தன்மையோடு நடந்திருக்கிறான். ஆனால் கணவன் கூறிய புத்திமதிகளை ஒரு காதில் வாங்கி மற்றொரு காதால் விட்டு விட்டு மீண்டும் தன் கள்ளக் காதலனோடு தினம் தினம் உல்லாசமாக இருக்கிறாள் ஜெயகவிதா.

### பழையபடி வேதாளம்

மீண்டும் தன் மனைவி கள்ளக்காதல னோடு கொஞ்சி விளையாடிக் கள்ளக் காதல் புரிவதைக் கண்டான் ஆனந்தன். ஆத்திரப் பட்டான். கோபமுற்றான், அதட்டினான், மிரட் டினான். ஆனால் இவை எதற்கும் பயப்பட வில்லை ஜெயகவிதா. "உன்னுடன் வாழ எனக்கு விருப்பமில்லை. நான் அருணுடன் வாழ்ந்து விடுகிறேன் எனக்கு விடுதலைப் பத்திரத்தைக் 'கொடுத்து விடு' என ஜெய கவிதா எச்சரிக்கை விடுத்திருக்கிறாள்.

சொந்த பந்தங்களை எதிர்த்து, தாய ரின் வேண்டுகோளைப் புறக்கணித்து அவளை மனம் நோகவைத்து, தான் காதலித்துக் கட்டிக் கொண்டவளை எப்படிப் பிரிவது? அப்படிப் பிரிந்தால் தனது 5 வயது மகனின் எதிர்காலம் என்ன ஆவது எனக் கவலை கொண்டான் ஆனந்தன். விவாகரத்தை

அழைத்துச் சென்று தன் மகனோடு சாமி கும்பிட்டும் இருக்கிறான்.

### வஞ்சகியின் நாடகம்

இன்று முதல் தன் வாழ்வில் வசந்தம் வந்துவிட்டது இனிவரும் காலம் வசந்த காலம் என்று அவன் மனதில் மகிழ்ச்சி என் னும் பட்டாம் பூச்சி சிறகடித்துப் பறந்தது. ஆனால் ஜெயகவிதாவோ உதட்டில் புன் னகையும் மனத்தில் வஞ்சனையும் வைத் துக் கொண்டு நல்லவள் போல் ஆனந்த னிடம் நாடகமாடி இருக்கிறாள். தன் கள் ளக் காதலன் அருணைச் சந்தித்து தம் காதலுக்கு இடையூறாக இருக்கும் ஆனந் தனை ஒழித்துக்கட்டத் திட்டம் தீட்டியிருக்க கிறாள். அருணும் கொலை வெறியுடன் ஆனந் தன் எப்படிக் கொலை செய்யலாம் என தன் காதலியுடன் பேசியிருக்கிறான்.

### கொலைக்குச் சதி

தன் அன்பு மனைவிதான் தனக்கு எமன் என்று அறியாத ஆனந்தன் அவள் கொடுத்த கேசரியைச் சாப்பிட்டான். அதில் தூக்க மாத்திரை கலந்திருக்கிறது என்பதை அறியாமல் சாப்பிட்டதும் மயங்கி விழுந் தான். இரவு கள்ளக்காதலனை வீட்டுக்கு அழைத்தாள். என்ன செய்யலாம் என்று யோசித்த காதலன் தலையணையை எடுத்து மயங்கிக் கிடக்கும் ஆனந்தனின் முகத்தில் வைத்து அழுத்தினான்.

அரை மயக்கத்தில் கிடந்த ஆனந்தன் அலறித் துடித்தான். தன் உயிரைக் காப் பாற்றிக் கொள்ளப் போராடினான். கொலை வெறி கொண்ட அருண் பக்கத் தில் கிடந்த தயிர்கடையும் மத்தை எடுத்து ஆனந் தனின் தலை, முகம் எனப் பல இடங்களிலும் பலமாக அடித்திருக்கிறான். அப்பொழுதும் ஆனந்தன் உயிர் போகாததை கண்ட அருண் மத்தின் கீழ்ப் பக்க தடியை அவன் கழுத்தில் வைத்துப் பலங்கொண்ட மட்டில் நசித்திருக்கிறான். மரணவாய் கையில் ஆனந்தனின் உயிர் சிறிது சிறி தாகப் பிரிகிறது. இத்தனையும் பக்கத்தில் நின்ற படியே வைத்த கண் வாங்காமல் பார்த் துக் கொண்டிருக்கிறாள் அந்தப் பத்தினி.

### கள்ளக்காதலரைக் காப்பாற்றக் கட்டுக்கதை

அன்றிரவு, அதே வீட்டில் உள்ளறை யில் தூங்கிக் கொண்டிருந்த நிர்மலா அறைக்கு வெளியே வர, தன் மருமகன்

ஆனந்தனின் சொத்துத் தேவைப்பட்டது என்றும் அதனால் ஆனந்தனைக் கொலை செய்தோம் என்றும் ஜெயகவிதாவும் அரு ணும் ஒப்புக்கொண்டிருக்கிறார்க்ள். பின்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறை யில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தந்தை கொலை செய்யப்பட்டு விட்டார். தாய் சிறை சென்று விட்டார். அனாதை யாக நிற்கும் குழந்தை விக்னேஸின் எதிர் காலம் கேள்விக்குறியாக இருக்கிறது.

ஆனந்தனின் தாய் - ஏற்கனவே நாலு பிள்ளைகளையும் கணவனையும் இழந்து இப்பொழுது அன்பு மகன் ஆனந்தனையும் இழந்து தவிக்கிறாள். தான் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவனை, கள் ளக்காதலனோடு சேர்ந்து கொலை செய்த தால், சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார் கள் ஜெயகவிதாவும் அவளது, தாயும், கள் ளக்காதலன் அருணும்.

இந்த இரண்டு குடும்பங்களும் சின்னாபின் னமாகச் சிதறக் காரணமாக இருந்த ஒரே துருப்புச் சீட்டு அருண். அருண் செய்த தவ றால் அவன் குடும்பமே அவமானத்தால் தலை குனிந்து நிற்கிறது.

பொ.இராசதுரை

### பாடமாக நிற்கும் பத்தினி

கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்த ஜெயகவிதா மற்றைய பெண்களுக்கு ஒரு பாடம். அடுத்தவன் மனைவி மீது ஆசை கொண்டால் முடிவு என்னவாகும் என்பதற்கு அருண் ஒரு உதாரணம். முகம் தெரிந் தவர்களையும் தெரியாதவர்களையும் அள வுக்கு மீறித் தன் குடும்பத்துடன் பழக விட் டால் பாதிப்பு யாருக்கு என்பதற்கு ஆனந் தன் ஓர் உதாரணம்.

பெண், பூவை விட மென்மையான வள். பூமியை விடப் பொறுமையானவள். இந்தப் பெண்தான் ஒரு நல்ல குடும்பத் துக்கு முதுகெலும்பு. ஒரு பெண் சரியாக ஒழுங்காக இருந்தால் ஒரு குடும்பம் நன் றாக வாழும் என்பது உண்மை. நல்ல குடும் பம் ஒரு பல்கலைக்கழகம்.

**"பெண்ணீன் பெருந்தக்க யாவுள,**
**கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்"**
**"பகை, பாவம், அச்சம், பழியென நான் கும் இகவாவாம் இல்லிறப்பான் கண்"**

# பாராளுமன்றத்தை நவம்பர் வரை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதி முடிவு?

(கொழும்பு)

உத்தேச பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்ட பின்பு வரவு செலவுத்திட்டம் வரை அதாவது நவம்பர் மாதம் வரை பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்திற்கு வழங்கிவரும் ஆதரவை ஜே.வி.பி. வாபஸ் பெறும் பட்சத்தில் தற்போது அரசாங்கத்திலுள்ள 120 ஆசனங்கள் 81 ஆக வீழ்ச்சியடையும். ஆதலால் ஆட்சி கவிழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் இடது சாரிகள் - 65, ஈபிடிபி -01, ஸ்ரீலங்கா மு.கா.மாற்றுக் குழு -04, இ.தொ.கா -08, ரோகித போகொல்லாகம -01 மற்றும் ஜாதிக் ஹெல உறுமய - 02 என 81 ஆசனங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஜே.வி.பியின் ஆசனம் 39ஆகும்.

ஜனாதிபதி சந்திக்கா குமாரதுங்கவைப் பொறுத்தவரை உத்தேச பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படும் பட்சத்தில் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரது ஆதரவும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (22) மற்றும் மலையக மக்கள் முன்னணி (02) ஆதரவும் கிடைக்கும் என்று எதிர்பார்ப்புடன் இருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடந்த சந்திப்பில் கூட கூட்டமைப்பின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி முன்கூட்டியே நேரடியாக தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் ஆட்சியைத் தக்க வைப்பதற்கு மேலும் 08 பேரின் ஆதரவு அவருக்கு தேவைப்படும்.

அப்படியான சூழ்நிலை வரும் பொழுது ஜே.வி.பி வெளியேற்றம் காரணமாக ஏற்படும் 4 அமைச்சர் பதவி மற்றும் 4 பிரதி அமைச்சர் பதவிகளை வழங்கி ஐக்கிய தேசிய கட்சியிலிருந்த சிலரை தன் பக்கம் இழுக்க ஜனாதிபதி முற்படுவார் என்றும் அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்போதைய அரசியல் நிலவரப்படி பாராளுமன்றத்தைக் கலைக்கும் உத்தேசம் ஜனாதிபதிக்கு இல்லை.

நவம்பர் மாதம்வரை பாராளுமன்றத்தை ஒத்தி வைப்பதன் மூலம் இடைப்பட்ட காலத்திற்குள் நிலைமையை சமாளிக்க முடியும் என அவர் எதிர்பார்ப்பதாக தெரியவருகிறது.

அரச வானொலி நிகழ்ச்சியொன்றில் கூட ஜனாதிபதி இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதாவது, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என்ற ரீதியில் அமைச்சர்களே இல்லாமல் முழு அமைச்சுக்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ கொணடு வரமுடியம்.

இதனை நேரடியாகச் செய்ய முடியும் அல்லது யாரையாவது அழைத்து பாராளுமன்றத்தை ஒத்திவைக்க முடியும். அதாவது வரவு செலவு திட்டம் வரை இதனை ஒத்திவைக்க அரசியல் யாப்பில் இடமளிக்கப்பட்டுள்ளது எனத் தனது கருத்தை வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி. (ற-4)

# ரூ. 5 இலட்சம் பெறுமதியில் பொலிகண்டியில் 40 வீடுகள்

## யு.என்.கபிரட் நிர்மாணிக்கும்

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பொலிகண்டி பிரதேசத்தில் 40 நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு யு.என் கபிரட் நிறுவனம் முன்வந்துள்ளது.

இந் நிறுவனத்தினால் இவ் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் இம்மாத இறுதி வாரத்தில் ஆரம்பமாகி இவ் வருடம் செப்டெம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படவுள்ளதாக இந் நிறுவனத்தின் திட்டப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வீடும் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியில் கட்டிக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

# ஆன்மீக சமுதாயத்தை உருவாக்க

## பிரதமர் ராஜபக்ஷ வலியுறுத்தல்

(கொழும்பு)

வழிபாட்டுத் தலங்களின் நடவடிக்கைகளில் இளைஞர்களைப் பங்குகொள்ளச் செய்வதன்மூலம் தார்மீகப் பெறுமதி வாய்ந்த ஆன்மீக ரீதியிலான சமூகம் ஒன்றை உருவாக்குவதன் அவசியத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

மேல்நாட்டுக் கலாசாரத்தில் தற்கால சநததியினர் ஈடுபடுவதைத் தடுப்பதில் வழிபாட்டுத் தலங்கள் முக்கிய பங்கை வகிக்க முடியும் என்று பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

பண்டுவாஸ்நுவர தேர்தல் தொகுதியில் உள்ள ரத்மாலுகந்த புரான விகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமய நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் பல்வேறுபட்ட சமயகுழுக்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு இந்த நடைமுறை உதவுமென்றும் குறிப்பிட்டார். (அ-2)

# நோர்வே அதிகாரிகள் குழு பருத்தித்துறைக்கு விஜயம்

(மருதங்கேணி)

நோர்வே ஏ.ஜெ நிறுவனமும், அரசியல் குழுவினரும் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறைக்கு விஜயம் செய்தனர்.

கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்திற்குச் சென்ற அவர்கள் தும்பளையில் இயங்கும் படகுதிருத்தும் நிலையத்தை பார்வையிட்ட பின்னர் தொழில் ரீதியாக உள்ள பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினர்.

பின் இவர்கள் சுனாமியால் பாதிக்கபபட்ட கரையோர பிரதேசங்களான மணற்காடு, குடததனை பகுதிகளைப் பார்வையிட்டனர். அதன் போது குடத்தனையில் படகு திருத்தும் நிலையம் ஒன்றை அமைப்பது குறித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் ஏ.ஜெ.நிறுவன அதிகாரி சண்வீக், ஏ.ஜெ நிறுவன அபிவிருத்தி அமைப்பாளர் வித்ய பெரே, மற்றும் வடமராட்சி வடக்கு சமாச செயலாளா க.சூரியகுமார், சமாசத் தலைவர் ஜோன் பொஸ்கோ ஆகியோர் கலந்து கொண்டனர். (ச.35)

# வைத்தியசாலைகளைப் புனரமைக்க முறையான செயற்றிட்டம் நடைமுறை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளைப் புனரமைக்க முறையான செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சர் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளைப் புனரமைப்பது தொடர்பாக குறிப்பாக, வடக்கு கிழக்கில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளைப் புனரமைப்பது தொடர்பாக வலியுறுத்திக் கூறியதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த அரசு சுகாதார சேவைக்காக 29 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியிருந்ததாகவும் தற்போதைய அரசாங்கம் 44 ஆயிரம் மில்லியன் ரூபாவாக அதிகரித்து இருப்பதாகவும் அமைப்பின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

**குறிப்பு:**

**நேற்றைய வலம்புரியில் யதார்த்திகன் எழுதிய 'தானத்தில் சிறந்தது இரத்ததானம்' என்ற கட்டுரையில் யாருக்குக் குருதி தேவைப்படுகிறது என்ற உப தலைப்பின் கீழ், ஒரு மாதத்துக்குள் 5 பைந்த் குருதி தேவை என இருப்பதை 500பைந்த் எனத் திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)**

# வீதி சேதம்

(இணுவில்)

இணுவில் கிழக்கு புகையிரத வீதி குறிப்பிட்ட அளவு தூரத்திற்கு செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

தினமும் இவ் வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பொது மக்கள் எனப் பலரும் இதனால் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனால் இவ் வீதியினை மழை காலத்திற்கு முன்னர் செப்பனிட்டுத் தருமாறு இப்பகுதி மக்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (து-122)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு மூன்றாவது கட்டமாக விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி இன்றும் நாளையும் ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று யாழ்.வீதியில் ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலை அருகில் காலை 8.00 -10.00 மணிவரையும், அத்தியடிப் பிள்ளையார் கோவில் முன்பாக காலை 10.30 -12.30 மணிவரையும் கல்வியாங்காடு வன்னியசிங்கம் படிப்பகத்தில் பி.ப 2.00 - 4.00 மணி வரையும் நாளை நலலூர் இந்து விடுதி அலுவலக முன்றலில் காலை 8.00 - 10.00 மணிவரையும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எனவே அனைவரும் தத்தமது வளர்ப்பு நாய்களுககு தவறாது தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (ற)

# பண்டிதர் வகுப்புக்கள் ஆரம்பம்

எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் தர்மகர்த்தா சபையின் சார்பில் பண்டிதர் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

வகுப்புகள் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் தொடர்ந்து நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வகுப்பில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 18 ஆம் திகதி அன்று தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு சபையினர் வேண்டுகின்றனர். (அ)

# கூட்டாஞ்சோறு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன பெண்கள் அபிவிருத்தித்திட்ட கிராமங்களில் மக்களோடு மக்களாக கூடி ஊரோடு உறவாடும் களமாக 'கூட்டாஞ்சோறு' நிகழ்வினை செயற்படுத்தி வருகின்றது.

இதனூடாக அப்பகுதிகளில் உள்ள பிரச்சினைகள், மக்களின் உளம் சார் பிரச்சினைகள் என்பன இனம் காணப்பட்டு அப்பிரச்சினைகளைத் தவிர்த்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் அப்பகுதிகளை அபிவிருத்தி செய்து வருகின்றது.

அந்த வகையில் நாளை வியாழக்கிழமை நாவற்குழி வடக்கு செல்வநகரில் காலை 9.00மணி தொடக்கம் 5.00மணி வரை கூட்டஞ்சோறு நிகழ்வு இடம்பெறவுள்ள்து. (ற)

# புதிய தெரிவு

(பருத்தித்துறை)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க உப தலைவராக இருந்த எஸ்.ஆறுமுகநாதன் சங்கத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் உப தலைவராக எஸ்.குகன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இயக்குநர்சபைத் தலைவராகவிருந்த எம்.இராமச்சந்திரன் காலமானதையடுத்தே இப்புதிய தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற-52)

# விடுமுறைக்கால சித்திரப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி கந்தமடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனம் மாணவர்களின் விடுமுறைக் காலத்தை பயனுள்ளதாக்க இலவச சித்திரப் பயிற்சியொன்றைக் கடந்த 13ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளது.

எனவே இதில் பயில விரும்பும் தரம் 6க்கு மேற்பட்ட மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (அ)

# வருடாந்த மஹோற்சவம்

(பொன்னாலை)

தொல்புரம் - வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவமும், 22 ஆம் திகதி காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும், மறுநாள் 23 ஆம்திகதி பிராயச்சித்த விழாவும் இடம்பெறவுள்ளன. (ற-49)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(பொன்னாலை)

சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கும் நண்பகல் 12.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ற-49)

# உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழில் 1000 வீடுகள் நிர்மாணம்

## பயனாளிகளுக்கு நாளை முதற்கட்ட கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு -கிழக்கு மாகாண வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் முதற் கட்டமாக 2005ஆம் ஆண்டு 1000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக 1000 பயனாளிகளுக்கு முதலாவது பகுதிக் கொடுப்பனவாக ரூ.50 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

இவ் முதலாவது பகுதிக் கொடுப்பனவு பயனாளிகளிடம் வழங்கும் வைபம் நாளை காலை 11.00 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தல் யாழ்.மாவட்ட அரச அதிபா கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வடக்கு -கிழக்கு மாகாண வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டப்பணிப்பாளர் செ.பத்மநாதனும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-19)

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு - குறள்

வலம்புரி

# வீட்டுக்குள் முடங்கியவர்கள் வீதிக்கு வந்து கொக்கரிக்கலாமா?

பொதுக் கட்டமைப்பிற்கு எதிராக தென்னிலங்கைப் பேரினவாதிகள் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள் தொடர்கதையாக நீண்டுசெல்கிறது.

பொதுக் கட்டமைப்பிற்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்கள் உண்மையில் பொதுக் கட்டமைப்பிற்கு எதிரானதல்ல. அது தமிழ்மக்களுக்கு எதிரான போராட்டமே.

இதை உலகநாடுகள் உணர்ந்துகொள்ளவேண்டும். விடுதலைப் புலிகளுடன் இணைந்து சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதே சாத்தியமானதென்பதை தென்னிலங்கை இனவாதிகள் புரிந்துகொள்ளாவிடினும், உலகநாடுகள் புரிந்துகொண்டுள்ளன.

யார் எதிர்த்தாலும் பொதுக் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி தெரிவித்த கருத்தினை இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் வரவேற்றதிலிருந்து, மேற்போந்த கருத்து ஆதாரப்படுத்தப்படுகின்றது.

உலகநாடுகள் வரவேற்கின்ற, ஒருநாட்டின் ஜனாதிபதி ஏற்றுக்கொள்கின்ற உடன்படிக்கையை எதிர்க்க வேண்டிய தேவை யாருக்குமே இருக்கமுடியாது.

பொதுக்கட்டமைப்பு என்பது விடுதலைப் புலிகளை உயர்த்துவதாகவோ, அரசின் அதிகாரத்தைக குறைப்பதாகவோ அமையாது. மாறாக சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் உதவிபெறுவதற்கும், அவர்கள் தம் வாழ்வியலை மீள அமைப்பதற்குமே அது உதவும்.

இந்த உண்மையைப் புரிந்துகொள்ளாமல் ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம் நடத்துவதும், பௌத்த பிக்குகள் உண்ணாவிரதம் இருப்பதும் - தமிழ் மக்களை எதிர்க்கவேண்டும், அவர்களை இந்த நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகளாக்கவேண்டுமென்ற நோக்கிலேயே ஆகும்.

காலாகாலமாக சிங்களவர்களால் அடிமைப்படுத்தப்பட்ட தமிழ்மக்கள் என்றுமே இலங்கைத் தீவை கூறுபோடவேண்டுமென நினைத்ததில்லை. இந்த நாட்டில் தாமும் மக்களாக வாழவேண்டும், இனத்துவ அடிப்படையில் தமக்கு நடத்தப்படும் பாரபட்சங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்பதையே விரும்பினார்கள்.

ஆனால், தமிழ்மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளுக்கு சிங்களத் தலைவர்களோ, பௌத்த பீடங்களோ, ஏன் சிங்கள மக்களோ மதிப்பளிக்கத் தவறினர்.

இதன் காரணமாகவே சிங்களவர்களுடன் ஒற்றுமையாக வாழமுடியாதென்ற முடிபை தமிழ்த் தலைவர்கள் எடுத்தனர்.

இந்த முடிபுகூட சிங்களவர்களைத் திருத்துவதற்காக - தமிழ் மக்களின் உரிமைபற்றி அவர்களைச் சிந்திக்க வைப்பதற்காக எடுக்கப்பட்டதாக இருந்திருக்கலாம்.

நாமே இந்த நாட்டின் ஆளும்வர்க்கத்தினர் என்ற கர்வத்தில், தமிழ்த் தலைவர்கள் எடுத்த முடிபுகளை சிங்களவர்கள் அசட்டைசெய்தனர். இதன் விளைவையே இன்று நாடு அனுபவிக்கின்றது.

இலங்கையை கூறுபோடுவதன் மூலமே தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழமுடியுமென்ற அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தேசவிடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

மண் விடுதலைக்காக தம் இன்னுயிரை உவந்தளித்தவர்கள் ஏராளம். அவர்கள் ஒவ்வொருவரினதும் ஆத்மசாந்தி என்பது தமிழீழம் என்ற தேசத்தின் முகிழ்ப்பிலேயே சாத்தியமாகும்: இது விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் நன்கு தெரியும்.

இருந்தும் உலக நாடுகளின் வேண்டுதல்களுக்கும், உள்ளுணர்வுகளுக்கும் மதிப்பளித்து விடுதலைப் புலிகளின் தலைமை சமாதானப் பேச்சுக்கு சம்மதம் தெரிவித்தது.

சிங்களமக்கள் போல தமிழ்மக்களும் சம உரிமையோடு வாழும் வாய்ப்புக்கள் கிடைத்தால் அழகிய இலங்கைத்தீவில் நாம் எல்லோரும் ஒற்றுமையாக வாழமுடியும் என்ற செய்தியை புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பகிரங்கமாக அறிவித்தார்.

மாபெரும் போராட்டம் நடத்திய ஓர் விடுதலை அமைப்பு சமாதானப் பாதையில் தனது பயணத்தினை ஆரம்பித்துள்ளபோது...

அதனை தமக்குச் சாதகமாக்கி தென்னிலங்கைப் பேரினவாதிகள் உண்ணாவிரதம் இருப்பதும், ஆர்ப்பாட்டம் செய்வதும் கோழைத்தனத்தின் உச்சமாகும்.

விடுதலைப் புலிகள் ஆயுதப்போர் புரிந்தபோது வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தவர்கள், இப்போது வீதிக்கு வந்து கொக்கரிப்பது அழகல்ல.

# சேது கால்வாய் தூர்வாரும் பணி சென்னை துறைமுகத்தில் ஒத்திகை

(சென்னை)

சேதுககால்வாய் தூர்வாரும் பணியின் ஒத்திகை சென்னை துறைமுகத்தில் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரியிலிருந்து மன்னார் வளைகுடா, ஆதாம் பாலம், பாக்பாலம், பாக் நீரிணையம் வழியாக வங்கக் கடல் சென்றடைய ஒரு கடல் வழிப்பாதை அமைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் பணி தொடக்க விழாவினை பிரதமர் மன்மோகன்சிங் தொடக்கி வைக்கும்போது கடற்கரையில் 30 கி.மீற்றர் தூரத்தில் பணியினைத் தொடங்க தயார் நிலையில் நிறுத்தப்பட்டு தூர்வாரி கப்பலின் செயல்பாடு களை நேரடி ஒளிபரப்பின் மூலம் உலக மக்களும், குறிப்பாக தமிழக மக்களும் மற்றும் விழா மண்டபத்தில் இருக்கும் அனை வரும் காண அமைச்சர் டி.ஆர்.பாலு முயற்சிகளை மேற்கொண்டார்.

இதன் முதல் கட்டமாக தூர்வாரி கப்பலில் இருந்து செயற்கைகோள்மற்றும் நுண் அலைகள் மூலம் ஒளிபரப்பவும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் நல்ல பலனை அளிக்காது என்ற அதிகாரிகளின் கருத்தினை ஏற்று அதைத் தொடர்ந்து அமைச்சரின் ஆலோசனையின் பேரில் இந்தியக் கடற்படையும், தொலைக்காட்சியகமும் இணைந்து-ஹெலிகொப்டர் மூலம் நேரடி ஒளிபரப்பு ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான ஒத்திகை நேற்று முன்தினம் சென்னை துறை முகத்தில் கடற்படை அலு வலகத்தில் அமைச்சர் முன்னிலையில் நடத்தப்பட்டது.

இதனை நேரில் ஆய்வு செய்த அமைச்சர் டி.ஆர்.பாலு இந்தியக் கடற்படையும், தொலைக்காட்சி அமைச்சகமும் இணைந்து மேற்கொண்ட ஒலிபரப்பு ஒத்திகை சிறப்பாக அமைந்தது என்றும், அதற்கான முயற்சியில் ஈடுபடுத்திக்கொண்ட சென்னை துறைமுகத் தலைவர், இந்தியக் கடற்படைத் தளபதி மற்றும் சென்னைத் தொலைக்காட்சி அதிகாரிகள் அனைவரையும் அமைச்சர் டி.ஆர்.பாலு சந்தித்துப் பேசினார். (ந)

# தேவை மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தால் நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## -செயலக கூட்டத்தில் எம்.பிக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராயும் பிரதேச செயலர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் காலை யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈழவேந்தன், சிவநேசன், ஈ.பி.டி.பி. அமைப்பாளர் மதனராஜா, மற்றும் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசேடமாக இக்கூட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலுமுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பிரதேசத்தின் குறைபாடுகள், செயலகர் பிரிவில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

ஒவ்வொரு பிரதேச செயலர்களதும் தத்தமது பிரிவுகளின் சுகாதாரம், வீதி அபிவிருத்தி நிலம், சிறுவர்பாடசாலை, மின்சாரம், நன்னீர், தங்குமிடவசதிகள் உட்பட பல விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

இதனால் ஒவ்வொரு பிரதேச செயலர்களும் தத்தமது பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குறைபாடுகளை மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளார்கள்.

இந்த அறிக்கைகளைத் தம்மிடம் வழங்கினால் தாம் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்களை தேவைகளின் அடிப்படையில் முனனுரிமைப்படுத்தி அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து நிதியைப் பெற்று குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (ந-19)

## சகல சமூகத்தினதும் உரிமைகளைப் பாதுகாத்து

# சமாதானத்தை ஏற்படுத்த அரசு உறுதியுடன் செயற்படும் - அனுரா

(கொழும்பு)



சகல சமூகத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும அரசாங்கம் உறுதியுடன் செயற்படுமென சுற்றலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், பொதுக்கட்டமைப்பு எனப்படும் சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கைக் கட்டமைப்பானது வடக்கு - கிழக்கில் சுனாமி மீள்கட்டுமான புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் அமைபென்பதையே குறிக்கும் ஐக்கிய மக்கள சுதந்திரக் கூட்டமைப்புக்கு அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய ஆணைப்படி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும பொறுப்பு எமக்குண்டு எனவும் அமைச்சர் அனுராபண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்பு தொடர்பிலான எதிரான நிலைப்பாட்டில் இருப்பதுபற்றி ஜே.வி.பி. சிறிது யோசிக்க வேண்டும். நாட்டின் வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்வதை ஜே.வி.பி.ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ந-6)

# பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் அதிக பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும்

## முன்னாள் அமெ.தூதுவர் ரெறஸ்ரிகா சி.சப்பர்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் அதிகமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரெறஸ்ரிகா சி.சப்பர் தெரிவித்துள்ளார்.

1992 ஆம் ஆண்டிலிருந்து 1995ஆம் ஆண்டு வரை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகக் கடமையாற்றிய இவர் நேற்று முன்தினம் ஆங்கில இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் செவ்வியில் மேலும் குறிப்பிடுகையில், விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்தில் சங்கமிக்க வைப்பதற்கு பொதுக்கட்டமைப்பு அருமையான வழியாகும்.

வடக்கு-கிழக்கில் சுனாமி நிவாரண, புனர்நிர்மாண, புனர்வாழ்வு நடவடிக்கைகளை பொதுக்கட்டமைப்பின் மூலம புலிகளிடம் கையளிப்பது இருதசாப்தகாலமாக நடைபெற்று வரும் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வருவதற்குக் கூட ஏதுவாக அமையலாம்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பில் அரசியல் கட்சிகளின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் இன்றியமையாதவை.

பொதுக்கட்டமைப்பு சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் அதில் முஸ்லிம்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவுக்கு ஜே.வி.பி பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதன் அதீத தொல்லைகள் காரணமாக அதனை அரசிலிருந்து விலக்கவும் ஜனாதிபதி முடிவு செய்துள்ளார்.

இது போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் யுத்த நிறுத்த உடன்படிக்கை கடந்த மூன்று ஆண்டுகளாக அமுலில் இருக்கின்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது எனவும் தெரிவித்தார். (ந-4)



## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எண்ணங்கள் அனைத்தும் பேச்சு அனைத்தும் சொல் அனைத்தும் இறைவனிடம் ஒப்படைக்கப் படுமாயின் இமைப்பொழுதேனும் இறைவனை மறந்திருப்பது பெரும் துன்பத்தைக் கொடுக்குமாயின் அப்போதுதான் பக்தியின் தொடக்கம் உள்ளது எனலாம்.

சுவாமி விவேகானந்தர்

## மின் கட்டணம் அதிகரிக்கும்

(கொழும்பு)

மின்சாரக்கட்டணத்தை 8வீதத்தால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக மின்சார சபையின் பொதுமுகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலை இரண்டு மூன்றுதடவைகள் அதிகரிக்கப்பட்டதனால் மின்சாரசபைக்கும் நேரடியாக பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் இதனாலேயே மின்சாரக்கட்டணத்தை அதிகரிக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## மீள் குடியமர்த்தக் கோரி

# தென்மராட்சி கிழக்கு மக்கள் மீண்டும் எதிர்வரும் 27ந் திகதி ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

அதி உயர் பாதுகாப்பு வலயமான தென்மராட்சி கிழக்கில் அமைந்திருக்கும் படைமுகாம்களை அப்புறப்படுத்தி அப்பகுதி மக்களை மீளக்குடியமர அனுமதிக்கவேண்டும் எனக்கோரி தென்மராட்சி கிழக்கு பிரதேச மக்கள் இம் மாதம் 27ஆம் திகதி மீண்டும் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தவுள்ளார்கள்.

அன்று காலை 9மணிக்கு உசன் கந்தசாமி கோவில் முன்றலில் ஒன்று கூடி அவ்வாலயத்தில் அரை மணிநேரம் இறை பிரார்த்தனை மேற்கொள்வார். பின்னர் உசன் இராணுவ முகாமிற்கு சென்று உசன் இராணுவமுகாம் பொறுப்பதிகாரியிடம் மகஜர் கையளிக்கவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஊர்வலமாக ஏ-9 வீதியூடாக கொடிகாமம் நோக்கிச் செல்லும் வேளையில் மிருசுவில் - கத்தோலிக்க தேவாலயத்தில் இறை பிரார்த்தனை மேற்கொள்ளவுள்ளனர்.

பின்னர் ஏ-9 வீதியூடாக கொடிகாமம் பிரதேசசெயலகத்தைச் சென்றடைந்து அங்கு பிரதேச செயலரிடம் மகஜர் கையளிக்கவுள்ளனர். இதனால் ஊர்வலம் சென்றடையும் வரை ஏ-9வீதி தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் ஊர்வலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளார்கள். இதேவேளை தென்மராட்சி கிழக்கு பிரதேச மக்கள் பாதுகாப்பு வலயங்களை அகற்றி தம்மை மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி கடந்த 11ஆம் திகதிவீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-19)

## இறந்த நிலையில் டொல்பின் மீன் புங்குடுதீவில் கரையொதுங்கியது

(புங்குடுதீவு)

இறந்த நிலையில் டொல்பின் மீன் ஒன்று கரையொதுங்கியது. புங்குடுதீவு கேரதீவுக்கடற்கரையிலேயே 8.5அடி நீளமுள்ள டொல்பின் மீன் நேற்று முன்தினம் அதிகாலை கரையொதுங்கியது.

கரையொதுங்கிய இம்மீனை ஏராளமானோர் சென்றுபார்வையிட்டனர். சுனாமியினால் கடல் நீர்மட்டம் உயர்ந்து ஆழ்கடலிலும் வேறு இடங்களிலும் இருந்த கடல்வாழ் உயிரினங்கள் கரைக்கு அண்மையில் அடித்துவரப்பட்டன.

தற்போது நீர்மட்டம் வற்றிவருவதால் இவ்வாறான உயிரினங்கள் உயிரிழப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ற-126)

## பொதுக்கட்டமைப்பினை எதிர்த்து

# 80 தொழிற்சங்கங்கள் இணைந்து கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு யோசனையைக்கைவிடுமாறு வலியுறுத்தி இன்று 80தொழிற் சங்கங்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தவுள்ளன.

மின்சக்தி,அரச அச்சக, துறைமுக, தொடருந்து, சுகாதார, எண்ணெய்கூட்டுத்தாபன, கல்வி உட்பட 80 தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் இன்று நண்பகல் 12மணிக்கு நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

80 தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவம் செய்யும் அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டிற்கமைய இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளது.

அரச அச்சகம், மின்சார சபை தலைமையகம், துறைமுகப்பிரதான நுழைவாயில், மருதானை தொடருந்து நிலையம், கொழும்பு தேசிய வைத்தியசாலை, பத்திரமுல்ல செத்சிறிபாய, இரத்மலானை தொடருந்து வேலைத்தளம், நாரம்பிட்டி நிளஅளவையாளர் திணைக்களம், கொலன்னாவை எண்ணெய மற்றும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களின் எதிரே இவ்வார்ப்பாட்டங்கள் நடத்த திட்டமிட்டிருப்பதாக தொழிற்சங்கத்தின் செயலாளர் பியசிறி விஜயநாயக்க தெரிவித்தார்.(ச-4)

## கடற்படையினர் மீது துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்படையினர் மீது நேற்று காலை 7.10மணியளவில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு கடற்படை வீரர் காயமடைந்துள்ளார்.

தலைமன்னார் பிரதேசத்தில் நேற்றுக்காலை வீதிச்சோதனையில் ஈடுபட்ட கடற்படையினர்மீது இனந்தெரியாத சிலர் மறைந்திருந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர் கடற்படையினர் இருந்த இடத்திற்கு ஒருகிலோ மீற்றர் தூரத்தில் இருந்து இத்துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் கடற்படை வீரர்கள் அப்பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டு சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

(ச-4)

# தமிழ் மக்கள் பேரவையினரை சந்திக்க ஜனாதிபதி விருப்பம்

(கொழும்பு)

திருகோணமலையில் தமிழ் மக்கள் பேரவையின் நிர்வாகிகளை சந்திக்க ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பினை நேற்று மேற்கொள்வதற்கு ஏற்பாடாகி இருந்தது. இதற்கென தமிழ் மக்கள் பேரவையினர் கொழும்பிற்கு அழைத்துச் செல்வதற்கு விசேட ஹெலிகொப்டர் ஏற்பாடாகி இருந்தது. என்றும் தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மை காரணமாக பிற்போடப்பட்டிருப்பதாக ஜனாதிபதி திருகோணமலை அரசஅதிபர் ஊடாக தமிழ் மக்கள் பேரவைக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் இன்றைய தினத்திற்கு முன்னர் தீர்வுகாணப்படாவிட்டால் நாம் தொடர்போராட்டங்களை நடத்தப்போவதாக தமிழ் மக்கள் பேரவை அறிவித்திருந்தது.

இந்நிலையில் தன்னைச் சந்திக்கும் வரையும் போராட்டங்கள் எதனையும் மேற்கொள்ளவேண்டாம் என ஜனாதிபதி திருகோணமலை தமிழர் பேரவையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச-4)

## தென்மராட்சியில்....

கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு தென்மராட்சி வணிகர் மன்றங்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை எதிர்வரும் சனிக்கிழமை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் தென்மராட்சி சிற்றூர்தி சங்கத்தினால் கண்டன அடையாள உண்ணாவிரதம் ஒன்று நடாத்தப்படவுள்ளது.

(ச-19,21)

# பொதுக்கட்டமைப்பை அரசு...

ரணில் விக்கிரமசிங்கா எவருக்கும் தெரியாமல் பிரபாகரனுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் ஏற்பட்ட தவறுகளை திருத்தவே ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியினை பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து ஜே.வி.பி அமைந்தது.

ஜனாதிபதி அதேபோன்ற திருத்த முடியாத தவறைசெய்ய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். தமிழீழ விடுதலைப்புலிகளிடம் தனியான இராணுவம் இருப்பதனை ஏற்றுக்கொண்டு ரணில் விக்கிரமசிங்க செய்துகொண்ட ஒப்பந்தம் காரணமாகவே உலகவங்கியின் தலைவர்,தமிழீழவிடுதலைப் புலிகளுக்கென தனியான நிர்வாகம் இருப்பதாகத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் கொபிஅனானும் கௌசல்யனுக்கு இரங்கல் தெரிவித்திருந்தார். இந் நிலைமையை மாற்றியமைக்க நாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை அமைத்தோம் என விமல் வீரவன்ச தெரிவித்தார்.

எதிர்வரும் 16ஆம் திகதி காலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இல்லாமல் போய்விடும் என்றும் அதன் பின்னர் அமைக்கப்படவிருக்கும் புதிய கூட்டுமுன்னணியில் ஐக்கிய தேசியக்கட்சியில் உள்ளவர்களும் இணைந்து கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நாம் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகிய பின்னர் பொதுக்கட்டமைப்பு முயற்சிகள் தொடருமானால் ஜே.வி.பி ஜனநாயக வழியில் இருந்து அதனை எதிர்க்கும் என்று அவர் எச்சரித்தார்.

இதேவேளை ஜனாதிபதியின் நிலைப்பாடு மாறாமல் விட்டால் 16 ஆம் திகதி காலை ஆட்சியை நடாத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை காண முடியாது என ஜே.வி.பியின் பிரதம பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

16ஆம் திகதிக்கு பின்னர் கூட்டமைப்பு அரசாங்கம் இல்லாமல் எவரேனும் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்தால் ஜே.வி.பி தனது முழு அளவிலான எதிர்ப்பை வெளிப்படுத்தும் எனவும் அவர் கூறினார்.

தனிப்பட்ட கோபதாபங்களுக்கன்றி தாய்நாட்டின் சுதந்திரத்திற்காகவே நாம் போராடுகின்றோம். ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் நாட்டை துண்டாடி சிங்கள மக்களின் சுதந்திரத்தை அழிக்க முற்படுகின்றார்.

இதற்கு நாம் கூட்டமைப்பு அரசின் பங்காளியாக இருந்து கொண்டு துணைபோகக் கூடாது என்பதற்காகவே இம்முடிவை எடுத்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (ச,4,8)

## பொதுக்கட்ட...

இரு தரப்பினரிடையேயும் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும். என்றும் உதவி வழங்கும் நாடுகள் தெரிவித்துள்ளன.

மேலும் போர்நிறுத்தத்தின் பெறுமதியானது மாறிமாறி இருதரப்பினரும் மேற்கொண்டு வரும் படுகொலைகளாலும், வன்முறைகளாலும் இடருக்கு உள்ளாகியுள்ளது. அத்துடன் வடக்குக் கிழக்கு மக்களுக்கு சுனாமி நிவாரண உதவிகளை உடனடியாக கிடைப்பதை உறுதிசெய்யும் பொருட்டு பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளன.

இதற்கு ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அர்ப்பணிப்புகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும், உடனடியாக பொதுக்கட்டமைப்பை புலிகள் வடக்குக் கிழக்கில் அமுல்படுத்த வேண்டுமென்றும் தெரிவித்துள்ள உதவி வழங்கும் நாடுகள், இதில் முஸ்லிம் தரப்பினர் பங்களிப்பும் முக்கியமெனவும் தாம் கருதுவதாகவும், இதுவே சமனான பங்கீட்டை உறுதிப்படுத்துவ தாகும் என்றும் தெரிவித்துள்ளன. (4-6)

## அரசிற்கு...

லையென அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் ஜே.வி.பி அரசாங்கத்திலிருந்து விலகி அதன் மூலம் அரசாங்கம் கவிழும் நிலைக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஒருபோதும் ஆதரவளிக்காது.

ஜனாதிபதியின் பொதுக்கட்டமைப்பு விடயத்திற்கு எதிர்ப்பினை வெளியிடும் முகமாக ஜே.வி.பி அரசாங்கத்திலிருந்து விலகுமானால் பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு அல்லது சிறுபான்மை ஆட்சி ஒன்றை முன்கொண்டுசெல்வதா என ஜனாதிபதியே தீர்மானிக்கவேண்டுமென பீரிஸ் மேலும் கூறினார். (ச-4)

## ஜே.வி.பியின்....

குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொதுஜனஐக்கிய முன்னணியின் கோரிக்கைக்குப் பதிலளித்த ஜே.வி.பி. உறுப்பினர்கள், தம் அரசியல் பீடத்திற்கு இவ்விடயத்தை முன்வைத்த பின்னரே பதிலளிக்கலாமெனத் தெரிவித்துள்ளனர்.(ச-4)

# அரசைவிட்டு ஜே.வி.பி....

ஜே.வி.பிக்கு நான்கு அமைச்சுகள் வழங்கப்பட்டபோதிலும், அவர்கள் இந்த அமைச்சுக்கள் ஊடாக உரியவகையில் செயலாற்றவில்லை. இப் பொதுக்கட்டமைப்பினை எதிர்ப்பவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

எவ்வாறாயினும் யார் தங்கள் எதிர்ப்புக்களைத் தெரிவித்தாலும் தான் எடுத்தமுடிவை ஒருபோதும் மாற்றப்போதில்லையென ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஆழிப்பேரலை நிவாரணசபை எனப்படும் பொதுக்கட்டமைப்பினை நிறுவுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியினது நிறைவேற்று சபை, மத்தியகுழு ஆகியவற்றின் அனுமதி எனக்குக் கிடைத்துள்ளது.

நிவாரணசபை குறித்து இனி ஒருபோதும் ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளமாட்டேன் என்றார். அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி 15 ஆம் திகதி நள்ளிரவு வெளியேறினாலும் அதனால் ஒரு பிரச்சினையும் ஏற்படப்போவதில்லை.

அரசாங்கத்தை விட்டு விலகினாலும் நிவாரணசபையில் கைச்சாத்திடுவதனை நான் நிறுத்தப்போதில்லை. நிவாரணசபை மூலம் நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படாது. நிவாரணசபையில் தேசிய குழுவின் ஒரு அங்கத்தவரேனும் எதிர்ப்பினைத் தெரிவித்தால் குழுவைக் கலைக்கமுடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

(ச-4)

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

பாண் விலை மாற்றம்

15.06.2005 இன்றில் இருந்து 450 கிராம் பாணின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை ரூபா 19.00 ஆகும் என்பதனை அங்கத்தவர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம். நிறை, தரம், விலை ஆகியவற்றில் குறைபாடுகள் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.

குறிப்பு : பேக்கரி மா தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும், (பிறிமா மில் பிறாண்ட்)

559,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (c1444)

நிர்வாகம்,
யா.மா.பே.உ.சங்கம்

மனோகரா யாழ்.
08.06.2005 முதல்
ஸ்ரீகாந், கோபிகா, விவேக் நடித்த




கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இன்டி பெண்டன்ஸ்டே டைரக்டர்
ரோலண்ட் எம்ரீக் மீண்டும்
முத்திரை பதிக்கும் படைப்பில்
THE DAY AFTER TOMORROW
(தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை விபரிக்கும் சித்திரம்
கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
நவதீப், தேசாஜெயராம்,
ஸமிக்சா, பிரகாஸ்ராஜ்
நடித்த
அறிந்தும் அறியாமலும்
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.